Registered as a News Paper at the G. P. O. Sri Lanka' Under No QB/8965/78

# ஐக்கியதீபம்


ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி ஐ. நா ச. | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |


ஆண்டுச் சந்தா: 3-50 விலை சதம் 25

மலர்: 34 (புதிய தொடர்) மாசி 1979 இதழ் 9

# கூட்டுறவு மக்கள் கைகளில் கொடுக்கப்படவேண்டும்

## கூட்டுறவு வளர விசாரணைக் குழு தகவுரை

**அரசியல் தலையீடுகளிலிருந்து கூட்டுறவை மக்களிடம் திருப்பிக் கொடுப்பதன் மூலம் உண்மையான கூட்டுறவு இயக்கத்தை உருவாக்குதல் வேண்டும் என்று ஐந்துபேர் கொண்ட கூட்டுறவு மறுசீரமைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தகவுரை செய்துள்ளது.**

கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையில் அரசிற்கு எந்தவித உரிமையும் இல்லை. ப. நோ. கூ. சங்கங்களிலும் வேறு சங்கங்களிலும் பெரும்பாலான நெறியாளர்களை அரசு நியமனம செய்யும் இன்றைய அமைப்பு முறை உடனடியாக விலக்கப்படவேண்டும் என்று மேலும் அக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் கூட்டுறவு அமைச்சரிடம் இக்குழு கையளித்துள்ள குறித்த அறிக்கையில் இலங்கையிலே உண்மையான கூட்டுறவு இயக்கத்தை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டிய அவசியத்தினை மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளது:

மாண்புமிகு நீதியமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகம் அவர்களைத் தலைமையாகக் கொண்ட அக்குழுவில் திருவாளர்கள் கே. அபேவிக்கிரம (பா.உ) எம். எல். எம். அபுசாலி (பா. உ) ஜி. எம். பிரேமச்சந்திரா (பா.உ) பாலித ஈ.வீரமன், ஆர் எச். டிமெல் (செயலாளர்) ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

கூட்டுறவின் வரலாற்றை 1911ம் ஆண்டிலிருந்து மிகவும் நுணுக்கமாகவும் தெளிவாகவும், ஆராய்ந்தறிந்த இக்குழு அந்த இயக்கத்தினை மறுசிரமைப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய பல நடவடிக்கைகளைத் தகவுரை செய்துள்ளது. அவற்றுள் பிரதானமானவை வருமாறு:

✻ கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒரு தேசிய ஆலோசனைச் சபையினை நிறுவுதல்

✻ கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தை 'மூடுண்ட' திணைக்களமாக ஆக்குதல்

✻ கூட்டுறவு எண்பார்வைக்கென தனியான ஒரு திணைக்களம் அமைத்தல்

✻ இப்போதுள்ள தேசிய கூட்டுறவுச் சபைக்குப் பதிலாக ஒரு புதிய இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தை நிறுவுதல்.

✻ கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிதிகளை இடுவதற்கு கூட்டுறவு வங்கி அமைத்தல்

✻ கூ மொ வி இலங்கை மொத்த வியாபார நிறுவனம் என மாற்றப்படல் வேண்டும்.

✻ பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைத்தல்

✻ இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்திடம் கூட்டுறவு நிதி கொடுக்கப்படல் வேண்டும்

✻ சந்தைப்படுத்தும் சம்மேளனம் திருப்பி அமைக்கப்படல் வேண்டும்

✻ கூட்டுறவு காப்புறுதிச் சங்கத்தை நிறுவுதல்

# ஆழமாகப் பதிந்த செயல்

### இந்தியாவில் தேசிய கூ. சபை உபதலைவர் உரை

இலங்கையில் அண்மையிலே வீசிய புயற்காற்றினால் பாதிக்கப்பட்ட சட்டுறவாளர்களுக்கு இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் உதவியளிக்க முன்வந்த பெருந்தன்மையான செயல எமது உள்ளத்தில் ஆழமாகப்பதிந்துவிட்டது.

இவ்வாறு ஐந்து கூட்டுறவாளர் கொண்ட குழுவிற்குத் தலைமை வகித்து இந்தியாவிற்கு விஜயம் செய்த ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவர் திரு: த. பூ முருகையா எட்டாவது இந்திய கூட்டுறவு மகா நாட்டையும் ஐம்பதாவது தங்க விழாவையுமிட்டு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் அங்கு கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.



இந்தியக் கூட்டுறவு மகாநாட்டிலும் தங்கவிழாவிலும் உபதலைவர் திரு த பூ. முருகையா உரையாற்றுகையில் எடுக்கப்பட்ட படம்'

தொடர்ந்து அவர் பேசுகையில் இங்கு நடைபெறும் கலந்துரையாடல்களில் நீங்கள் ஆராய்ந்து அறிந்து கொள்ளும் விடயங்கள் இந்தியாவில் மட்டுமல்ல, தெற்கு ஆசியாவிலும், தென் கிழக்காசியாவிலும் கூட்டுறவைப் பலப் படுத்த நல்ல வழிகாட்டியாக அமையும் என்று உண்மையிலே நான் நம்புகிறேன் என்றார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுறவுத் துறையில் நீங்கள் ஆற்றிவந்த முயற்சிகளுக்காக இலங்கைக் கூட்டுறவாளர்களின் மனமார்

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

# திரு. கணபதிப்பிள்ளை காலமானர்

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக்கிளையின் அலுவலகத்தின் அலுவலக சேவகர் திரு. ஆ கணபதிப்பிள்ளை அண்மையில் காலமானார்.

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையில் 1944 ம் ஆண்டு ஊழியராகச் சேர்ந்தார்.

மறைந்த பழம் பெரும் கூட்டுறவுத் தலைவர்களாகிய திரு. வீ வீரசிங்கம், திரு. அ. அருளம்பலம், திரு. இ. இராசரத்தினம் முதலிய சான்றோர்களின் கீழ் பணி புரிந்து தனது உயர்ந்த நேர்மையால், கடமையுணர்வால் அவர்களது நன்மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவராகத் திகழ்ந்தார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையாக இருந்து இன்று தேசிய கூட்டுறவுச் சபையாக விளங்கும் நிறுவனத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகளாகப் பணியாற்றிய அவரின் தோற்றத்தில் நேர்மைப் பண்பையும் வடபகுதிக் கூட்டுறவின் பழமையின் உயர்வையும் கூட்டுறவாளர் கண்டு மதித்தனர்; அவரை 'கணபதிப்பிள்ளை அண்ணர்' என்று அழைத்து வந்தனர்.

''எத்தனையோ மகான்கள் உலகிற்குத் தெரியாது தோன்றி, வாழ்ந்து, மறைந்து விடுகிறார்கள்'' என்பது ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு. இதனை திரு. கணபதிப்பிள்ளை அண்ணரின் வாழ்வு எமக்கு உணர்த்துகின்றது. அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

# ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க அமைப்புக்களை உருவாக்கல்

'கூட்டுறவுச் சங்கம்' என்ற பதத்திற்கு எங்கும் ஏற்றுக் கொள்ளப்படும் நியம வரையறை கிடையாது, இதற்கு முக்கிய காரணம் கடந்த காலத்தில் வகுக்கப்பட்ட வரையறைகளில் கோட்பாட்டு ரீதியான அல்லது அரசியல் சார்ந்த அம்சங்கள் இருந்ததோடு பிரத்தியேகமான சமூக, அரசியல் பொருளாதார நிலைமைகளைப் பற்றியும் இப் பல்வேறு வரையறைகளில் குறிப்புக்கள் சேர்க்கப்பட்டிருந்தன. இதனால் மாறுபட்ட சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகள் நிலவிய நாடுகளிலே இவ்வரையறைகளைப் பொருத்த முடியாதிருந்தது.

வது பொது அக்கறையுள்ளவர்களின் கூட்டு

(2) கூட்டு நடவடிக்கைக்குத் தன்னுதவியே உந்து சக்தியாய் இருத்தல்

(3) பொதுக் குறிக்கோளை எய்தும் பொருட்டு தொடங்கப்படும் முயற்சியை கூட்டாக நடாத்தி சொந்தம் பாராட்டுதல்

(4) உறுப்பினர்களின் மேம்பாடே பொது முயற்சியின் குறிக்கோளாய் இருத்தல்

நிறுவன அமைப்பு சார்ந்த இந்த நான்கு

தகைய சங்கம் விளங்குகின்றது. திட்ட வட்டமான சேவைகளை வழங்குமாறு உறுப்பினர்கள் வெளிப்படையாகக் கோருகின்றனர். எடுத்துக் காட்டாக குறிப்

ரண பங்காளிகளுக்கிடையேயுள்ள உறவுகளை ஒத்திருக்கத் தொடங்குகின்றது. உறுப்பினர்—சங்கத் தொடர்பினை சிக்கனப்படுத்துவதன் விளைவாக

**ஹான்ஸ் H. முன்கினர்**

பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தொகை அளவில் தருமாறு அவர்கள் கேட்கலாம். எத்தகைய சேவைகளை எந்தெந்த அளவில் எந்தெந்த தன்மையில்

கூட்டுறவு முயற்சியின் நிலை கூடிய சுதந்திரமுள்ளதாய் விளங்கத் தொடங்குகின்றது. கூட்டுறவு முயற்சி கடைப்பிடிக்கும் கொள்கையை உறுப்பினர்களும்

தொழில் வல்லுனர்களின் குறிக்கோள்களுக்கு மிடையே வேறுபாடுகள் எழலாம். கூட்டுறவு முயற்சி தனக்கென்று குறிக்கோள்களை வகுத்துக் கொள்ளும் போது கூட்டு நடவடிக்கைகளிலும், கூட்டு முயற்சிக்கான இலக்குகளை வகுப்பதிலும் உறுப்பினர்கள் அக்கறையை இழக்கக் கூடிய ஆபத்து உருவாகலாம். கூட்டுறவு முயற்சி வழங்கும் சேவைகளை உறுப்பினர்கள் பயன்படுத்தாது விடலாம். அதே வேளை கூட்டுறவு முயற்சி

கூட்டுறவுக் கொள்கைகளை வரையறுக்கும் பணியில் ஈடுபட்ட அனைத்துலகக் கூட்டுறவு இணைப்பு நிறுவன ஆணைக்குழுவின் அறிக்கையிலும் (லண்டன் 1967) அனைத்துலக தொழில் மகாநாட்டின் தசவுரையிலும் (1966) பொதுப் படையாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய வரையறையை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கோட்பாடு சார்ந்த அம்சங்கள் இயன்றளவு குறைக்கப்பட்டு கூட்டுறவுச்சங்கம் ஒரு நிறுவனம் என்றவகையில் அதன் பொதுவான, எங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தன்மைகள் அழுத்தப்பட்டன.

கோட்பாடு சாராத இத்தகைய நடைமுறை வரையறையில் கூட்டுறவு அமைப்பில் நான்கு அம்சங்கள் இனங்காணப்படுகின்றன. அவையாவன:

(1) குறைந்தது பொருளாதார நலன் ஒன்றிலா

கூறுகளையும் தம்மகத்தே கொண்டு விளங்கும் எல்லா நிறுவனங்களும்—அவற்றின் சட்ட வடிவமோ பெயரோ எவ்வாறாக இருப்பினும்—கூட்டுறவுச் சங்கங்கள் எனக்கருதப்படலாம்.

### வெவ்வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

பல ஆண்டுகளாக ஜெர்மனியக் கூட்டுறவு இயலில் கூட்டுறவுச் சங்கங்களை மூன்று வகைகளாக வகுக்கும் வழக்கம் நிலவிவருகின்றது. அவையாவன:

(1) மரபு வழி வந்த கூட்டுறவுச் சங்கம்

(2) சந்தை இணைப்புக் கூட்டுறவுச் சங்கம்

(3) ஒருங்கிணைந்த கூட்டுறவுச் சங்கம்

(1) மரபு வழி வந்த கூட்டுறவுச் சங்கம். இவ்வகைச் சங்கத்தில் பொது முயற்சி பூரணமாக விருத்தி செய்யப்படுவதில்லை. உறுப்பினர்களின் முயற்சிகளை நிறைவேற்றும் அலகாகவே இத்

கூட்டுறவுச் சங்கம் வழங்க வேண்டுமென நிருவாகக் குழுவிற்கு திட்ட வட்டமாகத் தெரிவிக்கப்படுகின்றது. உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே நிருவாகக் குழுவின் பணியாகும். எனவே இத்தகைய கூட்டுறவுச் சங்கம் பூரண வளர்ச்சி பெற்றுள்ள முயற்சியன்று; உறுப்பினர்களின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழிவகுக்கும் துணை உறுப்பே அது.

### சந்தையிணைப்பு கூட்டுறவுச் சங்கம்

வேறு (தனியார்) வியாபார நிறுவனங்களுடன் போட்டி போட்டு கூட்டுறவுச் சங்கம் இயங்க வேண்டிய சூழ்நிலையில் சங்கம் கூட்டுறவு முயற்சியாகத் திகழ வேண்டியிருக்கிறது. உறுப்பினர்களின் முயற்சிகளுக்கும் கூட்டுறவு முயற்சிக்கு மிடையேயுள்ள தொடர்பு சந்தையிலே சாதா

நிருவாகக் குழுவும் மட்டுமல்ல வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் தொழில் திறம் வாய்ந்த முகாமைப் பகுதியும் நிர்ணயிக்கின்றது.

சில வேளைகளில் உறுப்பினர்களின் குறிக்கோள்களுக்கும், முகாமைத்

உறுப்பினர்கள் அல்லாதோருடன் தனது வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டால் படிப்படியாக கூட்டுறவு முயற்சி வணிகக் கம்பெனியாக உருமாறலாம்.

(வளரும்)

## சமாசத்திற்கும் கடன் வழங்க முகாமையாளருக்கு அதிகாரம்

''மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளருக்கு ரூபா 800,000/-வரை ப.நோ.கூ. சங்கங்களுக்குக் கடன் அனுமதிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது போன்று எமது சமாசத்திற்கும் ரூபா 1,000,000/- வரை கடன் வழங்க அன்னாருக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டு''மெனக் கோரும் தீர்மானம் வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சமாச அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு குறித்த சமாசத் தலைவர் திரு. K S பொன்னுத்துரை தலைமை வகித்தார்.

## உலகக் கூட்டுறவுச் செய்திகள்

### கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மேம்பட்ட வாழ்வு

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மேம்பட்ட வாழ்வு என்ற பொருள் பற்றி அண்மையில் பீனாங்கில் தேசிய கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. மலேசிய கூட்டுறவு ஒன்றியம் இவ்விரு நாள் கருத்தரங்கிற்கு ஒழுங்கு செய்திருந்தது.

### பொது விநியோக அமைப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு

பொதுப் பங்கீட்டு அமைப்பில் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு குறித்து அண்மையில் ஸ்ரீநகரில் கருத்தரங்கு ஒன்றினை கூட்டுறவுப் பயிற்சிக்கான தேசிய சபை நடாத்தியது. அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் பிரதேச அலுவலக இணை நெறியாளர் கலாநிதி தர்ம்வீர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார். கருத்தரங்கினைத் தொடர்ந்து பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான விவாத அரங்கொன்று நடைபெற்றது. விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் 'ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினூடாகவே சாத்தியமானது''

ரில் நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளிலே கூட்டுறவு இயக்கத்தின் பங்களிப்பு வற்புறுத்தப்பட்டது.

### விலைவாசி உயர்விற்கு எதிரான நடவடிக்கை

அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலை உயர்வதைத் தடுக்கும் முகமாக இந்திய தேசிய விளைபொருள் சந்தைப்படுத்துதல் கூட்டுறவுச் சம்மேளனம் முன்னேற்பாடுகளைச் செய்துள்ளது. பாவனையாளருக்கு வேண்டிய பருப்பு வகைகள் கடலை எண்ணை, வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றை சம்மேளனம் கொள்வனவு செய்து தனது களஞ்சியங்களில் சேமித்து வைத்துள்ளது. தட்டுப்பாடு ஏற்படும் போது பாவனையாளருக்கு வழங்க இச் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ளது.

### கூட்டுறவு ஒன்றியம் மகஜரைக் கையளித்தது

பங்களாதேஷ் கூட்டுறவு ஒன்றியம் அண்மையில் பங்களாதேஷ் அரசாங்கத்திற்கு கூட்டுறவு இயக்கத்தினை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மகஜர் ஒன்றினைக் கையளித்தது.

பத்தொன்பது அம்சங்களை அடக்கிய இம் மகஜ

### புதிய உத்தியோகத்தர்

சிங்கப்பூர் தேசிய கூட்டுறவு ஒன்றிய பொதுச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திரு. மக்ஹப்ஹெங் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் உதயம்

பிரித்தானியாவிலே கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் ஒன்று உதயமாகியுள்ளது. இதை நிறுவுவதற்கென 'பாராளுமன்றம் நிறைவேற்றிய முறி மகாராணியின் ஒப்புதலை அண்மையில் பெற்றது. பிரித்தானிய கூட்டுறவு இயக்கத்திலே இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

பிரித்தானியாவை நோக்கும் பலவேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கூட்டுறவு மார்க்கத்தைக் கைப்பிடிப்பதில் மீண்டும் அக்கறை தோன்றியுள்ளது. இக்கட்டத்தில் இந்நிறுவனத்தின் உதவியோடு புதுவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை விருத்தி செய்வதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தபோதிலும் விவசாய கடற்றொழில் வீடமைப்பு கடனுதவி போக்குவரத்துத் துறைகளிலும் புதிய மாற்றங்களுக்கு இது வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சோவியத் ஒன்றியத்தில் கூட்டுறவுத்துறை

ராஜ ஸ்ரீகாந்தன்

கூட்டுறவுச் சங்கமொன்றின் சகல அங்கத்தவர்களுக்கும் பொதுவாகவுள்ள பிரச்சினைகளுக்கான கூட்டுத் தீர்வுகளுக்காக நிதிகளையும், பலவேறு வசதிகளையும் ஓரிடத்திற் குவியச்செய்யும் செயற்பாடே எந்தவொரு கூட்டுறவு முறையினதும் ஸ்தூலமான அம்சமாகும்.

எவ்வகையான பிரச்சினைகள் அல்லது சிக்கல்கள் மக்களை ஒன்றுபடவைக்கின்றன? எவ்வகையான சமூக நிலைப்பாடுகளின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன? இவ்விரு கேள்விகளும்தான் கூட்டுறவு முறையின் சமுதாய வகையினை நிர்ணயிக்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால் கூட்டுறவு நிலைகொண்டுள்ள, அது இயங்கும் சமூக அமைப்பினை நோக்காமல் கூட்டுறவினைப் பற்றிப் பேசுவது பொருத்தமற்ற ஆய்வாகும்.

தனியார் சொத்துடமைகள்மீது தளங்கொண்டுள்ள பொருளாதார, சமூக அமைப்புக்களைக் கொண்ட சமுதாயத்தில் ஏகபோகங்கள், சுரண்டல்கள், அநீதிகள் என்பனவற்றின் கொடூரமான தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்வதற்காக மக்கள் கூட்டுறவுமுறையில் ஒன்றுசேர்கிறார்கள். இவ்வாறான கூட்டுறவாளர்கள் சோவியத் கூட்டுறவுத் துறையிலுள்ள பிரச்சினைகளை விளங்கிக்கொள்ள வேண்டுமாயின் முதலில் அவர்கள் பிரதான விடயமொன்றினைப் புரிந்து கொள்ளவேண்டும்: சோவியத் கூட்டுறவுத்துறை முற்றிலும் வேறுபட்ட பொருளாதார, சமூக அமைப்பின்கீழ் தொழிற்பட்டு வித்தியாசமான பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுவருகிறது.

தொழிலாளர் வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கையேற்றதும் பாரிய நிறுவனங்கள், வங்கிகள், தொழிற்சாலைகள் என்பவற்றிற்தான் கூடிய கவனமெடுத்தன. சிறு விவசாயிகள், சிறு வர்த்தகர்கள், கைவினைஞர்கள் என்போரின் பண்ணைகள், நிறுவனங்கள் அவர்களுக்கே சொந்தமாக ஆரம்பத்தில் விட்டுவைக்கப்பட்டன. ஏனெனில் இச்சிறிய உரிமையாளர்கள் சுரண்டலர்களல்லர் இவர்கள் கடின உழைப்பாளிகள்.

வறுமையை விரட்டுவதிலும், பாதுகாப்பினையும் நம்பிக்கையினையும் வலுப்படுத்துவதிலும் கடின உழைப்பைக் கொண்ட விவசாயிகளுக்கும், கைவினைஞர்களுக்கும், சிறு வர்த்தகர்களுக்கும் உதவிபுரிவதற்கு தொழிலாள வர்க்கம் விரும்பியது. அரசு அதிகாரத்தை உபயோகித்து நிலவுடமையாளர்களுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களைப் பங்கிட்டு அவர்களுக்கு வழங்கியது. அவர்களைத் திணறடித்துக்கொண்டிருந்த பழைய கடன்களை இல்லாதொழித்தும், வரிகளைக் குறைத்தும் அவர்களுக்கு உதவி புரிந்தது. ஆனால் இவையெலாம் பிரச்சினைகளை முற்றுமுழுதாகத் தீர்த்துவிடவில்லை. பாரிய அளவிலான சோஷலிச உற்பத்திமுறைக்கு மாறிச்செல்வதன்மூலமே வறுமையினையும், சிதைபாடுகள் பற்றிய பயத்தினையும் முற்றாக ஒழிக்கக் கூடிய சாத்தியப்பாடு தோன்றும். இச்செயற்பாடு சோஷலிஸக் கூட்டுறவு முறையினால் மேற்கொள்ளப்பட்டது.

ரொபேட் ஓவனால் உருவாக்கப்பட்ட கூட்டுறவு முறையினை மார்க்ஸிய விஞ்ஞானத் திற்கேற்ற மாற்றங்களுக்குட்படுத்தி வெகுஜனங்களை பாரிய அளவிலான சோஷலிஸப் பொருளாதாரத்திற்கு மாற்றிச் செலுத்துபொருட்டு உன்னதமான கூட்டுறவுத் திட்டமொன்றினை விளாடிமிர் லெனின் முன்வைத்தார்.

அவருடைய திட்டம் முதலில் சோவியத் ஒன்றியத்திலும் பின்னர் வேறு சில சோஷலிச நாடுகளிலும் வெற்றிகரமாக அமுல் படுத்தப்பட்டது. விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை இன்று சோவியத் ஒன்றியத்தல் மிகப்பரவலாகச் சேவை புரிந்து வருகின்றன. சோவியத் பொருளாதாரத்தில் கூட்டுறவுத் துறையின் பிரதான பங்கினை சோவியத் அரசியல் யாப்பு நன்கு பிரதிபலிக்கிறது: ''சோ. சோ. கு. ஒன்றியத்தின் பொருளாதார அமைப்பின் அடித்தளம் அரச உடைமை (அனைத்து மக்களுக்கும் உரியது) கூட்டுப் பண்ணை – கூட்டுறவு உடைமை என்ற வடிவில் உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிஸ சொத்துடைமையாகும்'' விதி 10, விதி 12 கூட்டுப் பண்ணை – கூட்டுறவு முறை என்பவற்றின் இயக்கம் பற்றிய சமூக நிலைப்பாடுகளை வகைப்படுத்திக் கூறுகிறது ''கூட்டுப் பண்ணைகளினதும் ஏனைய கூட்டுறவு ஸ்தாபனங்களினதும் உடைமைகள் இவற்றின் விதிகளில் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்குத் தேவையான உற்பத்திச் சாதனங்களையும் மற்றும் சொத்துக்களையும் உள்ளடக்கியதாகும்.

''கூட்டுப் பண்ணைகள் வசமுள்ள நிலம் இவற்றின் சாசுவதமான பாவனைக்காக இவற்றிற்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

''நிலத்தைப்பயன்படுத்தும் ஏனையவர்களைப்போலவே கூட்டுப் பண்ணைகளும் நிலத்தை காத்திரமான முறையிலும் சிக்கனமாகவும் பயன்படுத்தவும் அதன் வளத்தை உயர்த்தவும் கடமைப் படடுள்ளன',

இன்றைய சோவியத் கூட்டுறவு முறைகளுள் கூட்டுப்பண்ணைகளே (விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள்)முக்கிய இடத்தைவகிக்கின்றன. ஒரு நடுத்தரக் கூட்டுறவுப் பண்ணை (சோவியத் ஒன்றியத்தில் 27,000க்கும் அதிகமான கூட்டுப் பண்ணைகள் உள்ளன) இன்று491 விவசாயக் குடும்பங்களை ஒன்றிணைக்கிறது. அதனிடமுள்ள 6,600 ஹெக்டர் நிலத்தில் 3,800 ஹெக்டரில் பயிர்ச்செய்கை நடைபெறுகிறது. 41 உழவு இயந்திரங்களையும் வேறு பல பண்ணை இயந்திரங்களைகொண்டுள்ளது, அதனுடைய பண்ணை வளர்ப்புகளில் சராசரி 1,755 மாடுகள் (588 பசுக்கள் உட்பட) 1,030 பன்றிகள், 1,824 ஆடுகள் என்பன உள்ளடங்கும் அதனுடைய அடிப்படைச் சுழற்சி மூலதனம் 3 732,000 றூபிள்கள், அதனுடைய சராசரி மொத்தலாபம் (பொருள் முதற்செலவுகள் கழிக்கப்பட்டபின்) வருடமொன்றிற்கு 909,000 றூபிள்களாகும்.

சோவியத் கூட்டுப்பண்ணைகள் உழைக்கும் விவசாயிகளின் பொருளாதார ஸ்திரத்திற்காகவும், வறுமைக்கெதிராகவும் நீண்ட காலமாகப் போராடி வந்துள்ளன. சோவியத் விவசாய அபிவிருத்தியின் இன்றைய நிலையில் முளைவிடக் கூடிய விசேஷ பிரச்சினைகளையும் அவை இன்று தீர்த்துவைக்கின்றன. இவ் விசேஷ பிரச்சினைகள் இயந்திரங்கள் தொழில் நுட்பம், உற்பத்தி அமைப்புத்திட்டம் என்பவற்றின் அடிப்படையில் கிராமங்களிலுள்ள வேலைகளிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்படுகின்றன. இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எவ்வாறு காணப்படுகின்றன?

பல்வேறு தொழிலகங்கள் (இயந்திர நிர்மாணம் இரசாயனம், நுண்ணுயிரியல், விவசாய விமானவியல், இன்னும் வேறு துறைகள்) விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென செயலூக்கத்துடன் சேவையாற்றி வருகின்றன 1978ஜூலையில்நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் கூட்டத்தில் விவசாய முன்னேற்றத்திற்கான புதிய வழிமுறைகள் பற்றி விவாதிக்கப்பட்டு புதிய இலக்குகள் திர்ணயஞ் செய்யப்பட்டன.

கூட்டுப் பண்ணைகளுக்கிடையிலான கூட்டுறவின் பல்வேறு வடிவங்களும், விவசாய – கைத்தொழில் ஒருமைப்பாடும் இன்று சோவியத் ஒன்றியத்தில் பரவலாக வளர்ச்சியடைந்துள்ளன. கூட்டுப்பண்ணைகளும், அரசும ஒன்றிணைந்து புதிய வடிவிலமைந்த நிறுவனங்களை உருவாக்கி கட்டிடப் பொருள்களின் உற்பத்தி, நிர்மாணவேலைகள், காட்டியல் நிர்வாகம், பண்ணை உற்பத்திகளைப் பதப்படுத்தல், பண்ணை விலங்குகளுக்கு உணவளித்தல், கைத்தொழில் முறைகளினூடு கோழிப்பண்ணைகளை பராமரித்தல் போன்ற வேலைகளையும் இன்னும்பல வேலைகளையும் செய்துவருகின்றன.

இந்தப் புதிய நிறுவனங்களுக்கு சமூக, அரசியல் அந்தஸ்த்து வழங்குமுகமாக லியோனிட் பிரஷ்னேவ் கூட்டுப் பண்ணைகளுக்கிடையிலான கூட்டுறவு விவசாய – கைத்தொழில் ஒருமைப்பாடு என்பவற்றின் அபிவிருத்திபற்றி எடுக்கப்பட்ட தீர்மானங்களைச் சுட்டிக்காட்டுகிறார். ''சில தனித்துவமான நிலைமைகளின் கீழ் லெனினுடைய மாபெரும் கூட்டுறவுத் திட்டத்தின் கொள்கைகளை இவை மேலும் அபிவிருத்தியடையச் செய்கின்றன.''

உற்பத்திக் கூட்டுறவுத் துறைக்கும் அப்பாற் சென்று சோவியத் ஒன்றியம் மிகச்சிறப்பான நுகர்வோர் கூட்டுறவுச் சங்க அமைப்பினை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தக் களஞ்சியங்கள் உணவுப் பொருட்களையும், மூலப் பொருட்களையும் கொள்வனவு செய்து அவற்றைப் பதப்படுத்த விற்பனவு செய்கின்றன. நகரங்களில் உள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன.

குடிமக்கள் தமக்கெனச் சொந்தமான வீடுகளைத் தாமே கட்டிக்கொள்வதற்கேற்ப நிலத்துண்டுகளை ஒதுக்கிக்கொள்வதற்கு சோவியத்யாப்பில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. சோவியத் மக்கள் இந்த உரிமைகளை பரவலாகப் பாவித்துவருகிறார்கள். 1977ம் ஆண்டின் இறுதிவரை நாலிலொரு பங்கு நகர்ப்புறமக்கள் இவ்வாறு சொந்த வீடுகளைக் கட்டியுள்ளார்கள் கிராமப்புறத்தில் இவ்வெண்ணிக்கை உயர்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்வாறான வீடுகளை தனியாகவரே கட்டுவதைவிட கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கட்டுவது மிகச் சுலபமானதும், சிக்கனமானதுமாகும். இதனாற்தான் வீடுகளைக் கட்டுவதற்கும், பராபரிப்பதற்கும் வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறான கூட்டுறவுச் சங்கங்கள் தமது சொந்த வருமானங்களைக்கொண்டு வீடுகள் கட்டுவோரை ஒன்றிணைக்கின்றன. வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு இலகுவான, நீண்டகாலக் கடன்களை வழங்குகிறது. அரசு நிறுவனங்கள், கூட்டுப்பண்ணைகள் என்பனவும் இவ்வாறான கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரிகின்றன

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களும் இங்கு நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. ஏனெனில் மக்களுடைய வருவாயும், தேவைகளும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கூட்டுறவு நிர்மாணத் துறையினர் மோட்டார் பழுது பார்க்கும் நிலையங்களையும், கிராமப்புறக் குடிசைகளையும், கோடைகால விடுதிகளையும் இன்னும் இவை போன்ற பலவற்றையும் நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

தனியார், சமூக நலன்களும் அரசு வேலைத்திட்டங்களும் உள்ளடக்கத்தின் ஒன்றுபடுகின்றன ' வாழ்க்கையில் பிடிப்புண்டாக்கல் மேம்படுத்தல் மேலும் வசதியுள்ளதாக்கல் என்பவற்றிற்கான விருப்பே அவ்வுள்ளடக்கமாகும்,

கூட்டுறவுத்துறைக்கும், அரசுக்குமிடையிலுள்ள நெருக்கமான உறவுகள் உற்பத்திகள் அதிகரிப்பதற்கும், சோவியத் மக்களின் வாழ்க்கைத்தரங்களை உயர்த்திச் செல்வதற்கும் உதவுகின்றன.

## பணியாளர்களுக்கு வழங்க வேண்டும்

இலாபம் பணியாளர்களுக்கு பங்காக வழங்கப்பட வேண்டும் என கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. மார்கண்டு முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்கம் நடாத்திய கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும்அவர் பேசுகையில் கூறியதாவது: பயிற்சி வகுப்புக்கள் பணியாளர்களுக்கும் நடாத்தப்பட வேண்டும். கடைகள் திறக்கும் நேரங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். கவர்ச்சியான முறையிலே விற்பனை நிலையங்களை வைத்திருத்தல் வேண்டும்.

சங்கத்தின் உபதலைவர் திரு. மயில்வாகனம் மேற்படி கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார். வவுனியா மாவட்டச் செயலாளர் திரு. M. பத்திநாதன் கூட்டுறவுச் சங்கங்களின் எதிர்காலம் என்னும் விடயம் குறித்தும் கல்வி உதவியாளர் திரு. புவனேஸ்வரன் கணக்கு வைக்கும் முறை பற்றியும் பொல்கொல கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளர் திரு. R. N. நாகலிங்கம் அங்கத்தவர்களின் முக்கியத்துவம் குறித்தும் உரை நிகழ்த்தினர்.

கூட்டுறவு என்பது அங்கத்தவர்களது கூட்டுறவை பெற்றுக்கொள்ளும் ஒரு சமூக ஸ்தாபனமாகும் எனவே, இச்சங்கங்கள் வெற்றிகரமாக இயங்க வேண்டுமாயின் தமது ஸ்தாபனத்தின இலட்சியங்கள், நடவடிக்கைகள் என்பன பற்றிய தெளிவான அறிவை அங்கத்தவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். சங்கப் பொதுக் கூட்டங்கள், குழுக் கூட்டங்கள் என்பனவற்றிற் கலந்து கொள்ளல், சங்க நிர்வாக உத்தயோகத்தராக விருத்தல் கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்புற நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் என்பன இத்தகைய அறிவைப பெற்றுக்கொள்வதற்கான சில பிரதான வழிகளாகும். எனினும், அங்கத்தவர்கள் பலர், தமது சங்கங்களது விவகாரங்கள் தொடர்பான எத்தகைய அறிவையும் கொண்டிராது காணப்பட்டமை, அல்லது சிறியளவு அறிவையே கொண்டிருந்தமை வங்கியின் மதிப்பீடு ஆய்விலிருந்து தெரிய வந்துள்ள உண்மையாகும். தமது சங்கங்கள் வெற்றியுடன் இயங்குகின்றனவா அல்லது தோல்வியுற்றனவா என்பது குறித்த அங்கத்தவர்களது கருத்துக்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது—

தங்களது கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றியில் / தோல்வியில் இயங்குகின்றன எனத் தெரிவித்த அங்கத்தவர்கள்

| [illegible]தில் | அங்கத்தவர் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| வெற்றி | 255 | 13.6 |
| வெற்றியல்ல | 145 | 7.7 |
| பதிலில்லை | 1.449 | 78.7 |
| | 1.849 | 100.0 |

றிதில் முக்கியமான விஷயம் யாதெனில் கிட்டத்தட்ட 75 சதவீதமானோர் இக்கேள்விக்கு விடையளிக்காமையாகும் இது, அவர்களது அக்கறையீனமமையை யோ, அல்லது அறிவின்மையையோ (அல்லது இரண்டையுமோ) தான் காட்டிற்று கூட்டுறவுச் சங்கங்களின் இன்றைய நிலையைப பொறுத்தளவில், இவ்விஷயம் நிச்சயமாக ஒரு வலுவான குற்றச்சாட்டாகும். வங்கியின் இந்த மதிப்பீட்டின்போது, தெரிய வந்த மற்றொரு விஷயம், கேள்விகள் கேட்கப்பட்ட சங்க அங்கத்தவர்களுள் 60 சதவீதத்துக்கும் அதிகமானோர் 1971-ல் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு இயக்கப் புனரமைப்பின் நோக்கங்கள் பற்றி அறியாதிருந்தமையாகும் தமது சங்கங்களது நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் முற்றாக ஒதுக்கப்பட்டிருந்தமையே, அவற்றின் வெற்றி, தோல்வி பற்றி அறிந்திராமைக்கும், கூட்டுறவு இயக்கப் புனரமைப்பின நோக்கங்கள், இலக்குகள் என்பன பற்றித் தெரிந்திராமைக்கும் காரணமாகவிருந்தது. குறித்த ஒரு பகுதியில் வாழும் மக்களது பொருளாதார சமூக நலனுக்காகவும் அபிவிருத்திக்காகவுமே ஒரு கூட்டுறவுச் சங்கம் பொதுவாக அங்கு நிறுவப்படுகின்றது. எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிகரமான செயற்பாட்டுக்கும், இயக்கத்துக்கும் அதன் அங்கத்தவர்களுக்குமிடையே சுமுகமான ஒரு பரஸ்பர உறவு அத்தியாவசியமாகிறது. அங்கத்தவர்களது பணிகளும், பொறுப்புக்களும் இந்த உறவு விஷயத்தில் ஒரு முக்கிய அம்சமாகத் கழ்கின்றன. எனினும், கீழேயுள்ள அட்டவணை காட்டுவது போன்று, கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்கு அவர்கள் என்ன பங்களிப்பைச் செய்யலாம் என்பதைவிட, அவற்றிலிருந்து என்ன பெற்றுக் கொள்ளலாம் என்பதிலேயே அங்கத்தவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கூட்டுறவுச் சங்கம் தொடர்பாக அங்கத்தவர்களது கடமைகள் எவை என்ற வினவுக்கு அங்கத்தவர்களது பதில்கள்

| கடமை | அங்கத்தவர் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 1. கூட்டுறவுச் சங்கங்கட்கு உற்பத்திப் பொருள்களை அதிகளவில் விற்பனை செய்தல் | 874 | 34 7 |
| 2. கிராமிய வங்கிகளில் அதிகளவு பணத்தை வைப்புச் செய்கை | 542 | 21. |
| 3. கூட்டுறவுச் சங்கங்களில் அதிக பங்குகளை வாங்கல் | 52[illegible] | 20.[illegible] |
| 4. உரிய காலத்தில் பயிர்ச் செய்கைக் கடனைத் திருப்பிச் செலுத்தல | 418 | 16.6 |
| 5. மேலே குறித்த அத்தனை பணிகளும் | 62 | 2 4 |
| 6. ஏனையன | 100 | 4 0 |

**பணிப்பாளர் சபை**

1971-ன் புனரமைப்பு நடவடிக்கைகளின் பின்னர் நடைமுறைக்கு வந்த முக்கிய மாற்றங்களுள் ஒன்று, பல சந்தர்ப்பங்களில்,பணியாளர் சபைக்கு 5 அங்கத்தவர்கள் இரகசிய வாக்கெடுப்புமூலம் தெரிவு செய்யப்பட்டமையும், கூட்டுறவுத் திணைக்களத்தால் 9 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டமையும், சங்கத்தின் அங்கத்தவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யவென இன்னொரு அங்கத்தவர் நியமனம செய்யப்பட்டமையுமாகும் ஆறு பேர் மாத்திரமே நியமனம் செய்யப்பட வேண்டும், ஒன்பது அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று புனரமைப்பில் வலியுறுத்தப்பட்டிருக்கிற போதும் இவ் அம்சம் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படாது. மேற்சொன்ன முறையிலேயே அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு பணிப்பாளர் சபையில் நியமனம் பெற்றனர். 1971-ன் பின்னர், ஒன்பது பேர் நியமனமுறை அர

(முற்றொடர்)

# கூட்டு[illegible]

சின் கொள்கை சிறப்பாக அமுல் செய்யப்படும் என்ற நோக்கத்துடனே ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக, எமது நாட்டைப்போன்ற வளர்முக நாடொன்றில் பொருளாதார நடவடிக்கையானது அரசாங்கத்தாலேயே முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென்பது இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

எனினும், உண்மையில் நியமனம செய்யப்பட்ட இந்த அங்கத்தவர்கள் உள்ளூர் அரசியல்வாதிகளின் கைப்பொம்மைகளாகக் காணப்பட்டார்களேஒழிய பரந்த அபிவிருத்திக் கொள்கைகளை அமுல் செய்வதற்கான கருவிகளாக விளங்கவில்லை பெரும்பாலும் அல்லது பல சந்தர்ப்பங்களில், இந்த நியமன அங்கத்தவர்கள் அவ்வப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே தெரிவு செய்யப்பட்டனர்; இந்நியமனங்களின்போது, சங்கங்களின் பரந்தமைந்த கொள்கைகள் இலட்சியங்கள் பற்றியோ இலக்குகள், நோக்கங்கள் பற்றியோ, அரசாங்கக் கொளகைகள் பற்றியோ எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. வங்கியின மதிப்பீட்டில் கேள்வி கேட்கப்பட்ட அங்கத்தவர்களுள் கிட்டத்தட்ட 87 சதவீதமானோருக்கு, பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படும் முறைபற்றி ஒன்றுமே தெரியாது இருந்ததென்பது தெரிய வந்தது. எனினும் இவர்களுள் 54 சதவீதமானோர், இரகசிய வாக்கெடுப்பு மூ[illegible] பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவதை விரும்பினர். மக்கள் வங்கியின் ஆய்வின்போது வினா கொடுக்கப்பட்ட சுமார் 61 சத வீதமான சங்கப் பொது முகாமையாளர்கள், தற்போது அமுலிலுள்ள பணிப்பாளர் சபைக்கான அங்கத்தவர் தெரிவு முறையை அங்கீகரிக்கவில்லை இவர்களுள் சுமார் 50 சத வீதமானோர்,பணிப்பாளர்களை நியமனம் செய்யத் தற்போது கையாளப்படும் முறை, குறு[illegible]கிய அர[illegible]ல் கார[illegible]ளினதும், அரசியற் செல்வாக்கினதும் அடிப்படையில அமைந்துள்ளதெனவும், இதுவே தற்போதைய நியமனமுறை தொடர்ந்தும் நிலவுதற்குத் தாங்கள் தெரிவிக்கும் பிரதான எதிர்ப்பு எனவும் குறிப்பிட்டனர் இது தவிர, 42 சதவீதமான முகாமையாளர்கள், பணிப்பாளர் சபைகளுக்கு நியமிக்கப்பட்டோர் தகுதியுடையவர்கள் அல்

(முற்றொடர்)

# கூட்டுறவு இயக்கம் தோன்றி வளர்ச்சியடைந்தமைக்கு ஏதுவாக இருந்த பொருளாதார சமூகக் காரணிகள்

இ. சுப்பிரமணியம்
பொறுப்பதிகாரி, கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஊதியம் பணமாகக் கொடுக்கப்படாமல் உணவுப் பொருட்களாகவே கொடுக்கப்பட்டன. அப்பொருட்களும் தரமற்றவையாக இருந்தன. தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 15-16 மணித்தியாலங்கள் வரை கடின வேலைகளைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். தொழிலாளர்களை மனிதர்கள் என்று கருதாமல் யந்திரங்களாகவும் மிருகங்களாகவும் கருதி வேலை வாங்கினர். பெண்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டனர் கர்ப்பிணிப பெண்கள்கூடி தொழிற்சாலைகளில் வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. தொழிற்சாலைகளில் பெண்கள் மனிதாபிமானமற்ற முறையில் குரூரமாக நடாத்தப்பட்டனர். தொழிலாளரின் வருமானம் போதாமையால் வயதுச் சிறுவர்கள் கூட தொழிற்சாலைகளில் கடின வேலைகளைச் செய்யுமாறு நிற்பந்திக்கப்பட்டனர் கூடுதலான வேலையை வாங்குவதற்காக சிறுவர்களுக்குச் சவுக்கடியும், கடின தண்டனைகளும் வழங்கப்பட்டன.

இப்போதுஉள்ளதுபோன்று தொழிற்சாலைச் சட்டங்களோ, தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களோ அப்போது இருக்கவில்லை. குற்றம் செய்யும் தொழிலாளர்களுக்கு வேலைநீக்கம்சம்பளவெட்டு போன்ற கடும தண்டனைகள் விதிக்கப்பட்டன காப்புறுதி வசதியோ யந்திர பாதுகாப்பு வசதியோதொழிலாளர்களுக்குச் செய்து கொடுக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது தொழிலாளர் யந்திரத்தில் அகப்பட்டு இறந்தால் எதுவித நட்டஈடும் வழங்கப்பட வில்லை. தொழிலாளருக்கு வேண்டிய சுகாதாரவசதிகளோ, வைத்திய வசதிகளோ கல்வி வசதிகளோ, வீட்டு வசதிகளோ, குடிநீர் வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை. சுகாதார வசதியற்ற வீட்டு

வசதியற்ற தெருவோரங்களிலேதான் தொழிலாளர் உறங்கினர். இவற்றுக்கு மேலாக நோய் வறுமை, களவு, கொள்ளை போன்றவற்றாலும் தொழிலாளர்கள் வலுவாகப் பாதிக்கப்பட்டார்கள்.

மேலே கூறப்பட்ட பிரச்சினைகளைவிட வேலையில்லாத திண்டாட்டமே தொழிலாளர்களை மிகவும் பாதித்தது, 19ம் நூற்றாண்டில இங்கிலாந்தில் பொழுதில் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தமையால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் படிப்படியாக வேலையால் நீக்கப்பட்டனர். தொழிலாளர்கள் சம்பள உயர்வைமுன்வைத்து வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் போன்றவற்றில் ஈடுபட்டமையாலும் பல தொழிலாளர்கள் வேலையால் நீக்கப்பட்டனர். இவற்றுக்குமேலாக 19ம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் சனத்தொகை அதிகரித்தமையும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு வழிவகுத்தது கிராமப்புறத்தில் வசித்த விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டு நகர்ப்புறங்களுக்கு தொழிற்சாலையில் வேலைதேடிவந்தமையாலும் வேலையில்லாத் திண்டாட்டம் பன்மடங்காக அதிகரித்தது

19-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த தொழிலாளர்கள் அனைவரும் மேலே கூறப்பட்ட பொருளாதாரக் கஷ்டங்களினாலும், முதலாளித்துவச் சுரண்டல்களினாலும் வலுவாகப் பாதிக்கப்பட்டிருந்தவர். தொழிலாளரை எதிர் நோக்கிநின்ற இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. றொபேட் ஓவன் என்பவர் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முதன் முதலாகத் தொழிற்சங்க இயக்கத்தைத் தொடக்கினார், [illegible]ப்பட ஓ[illegible]ன் பிரசாரத்தினால் தூண்டப்பட்ட தொழிலாளர் வர்க்கம் தொழிற் சங்கங்களை நிறுவி தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக வேலை நிறுத்தங்களிலும் ஈடுபட்டார்கள். ஏறக்குறையஒருநூற்றாண்டு காலமாகத் தொழிலாளர் தொழிற்சங்க மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எதுவிதபயனும் கிடைக்கவில்லை. முதலாளிவர்க்கத்தினர் ஆயுத பலத்தையும் பண பலத்தையும் பயன்படுத்தி தொழிலாளர் இயக்கங்களை அடக்கினார்கள். முதலாளிவர்க்கத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்குமிடையே நடைபெற்ற இப்போராட்டத்தை கார்ள் மாக்ஸ்,

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# ...ட்டுறவு

...ட்ட 87 சதவீதமானோ
...கு, பணிப்பாளர் சபை
...ங்கத்தவர்கள் தெரிவு
...ய்யப்படும் முறைபற்றி
...றுமே தெரியாது இரு
...தென்பது தெரிய வந்
...து. எனினும் இவர்களுள்
... சதவீதமானோர்,
...கசிய வாக்கெடு
... மூலம் பணிப்பா
...ர் சபைக்கு அங்கத்தவர்
...ர் தெரிவு செய்யப்படுவ
...த விரும்பினர். மக்கள்
...ங்கியின் ஆய்வின்போது
...ற கொடுக்கப்பட்ட
...மார் 61 சத வீதமான
...கப் பொது முகாமையா
...ர்கள், தற்போது அமுலி
...ள்ள பணிப்பாளர் சபைக்
...ன அங்கத்தவர் தெரிவு
...றையை அங்கீகரிக்க
...ல்லை இவர்களுள் சுமார்
... சத வீதமானோர், பணிப்
...ளர்களை நியமனம்
...ய்யத் தற்போது கை
...ளப்படும் முறை. ஒரு
...ப அர... காரண...ளி
...தும், அரசியற் செல்வாக்
...தும் அடிப்படையில
...மைந்துள்ளதெனவும்,
...துவே தற்போதைய நிய
...முறை தொடர்ந்தும்
...வுதற்குத் தாங்கள்
...ரிவிக்கும் பிரதான
...ர்ப்பு எனவும் குறிப்பிட்
...ர் இது தவிர, 42 சத
...தமான முகாமையாளர்
...ர், பணிப்பாளர் சபைக
...க்கு நியமிக்கப்பட்டோர்
...தியுடையவர்கள் அல்

லர் எனத் தாங்கள் உணருவதன் காரணமாக இம்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறினர். கூட்டுறவுச் சங்கங்களின் சபைகட்கு பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக, கூட்டுறவுத்துறை சார்ந்த அதிகாரிகளும் ஊழியரும் என்ன கருதினர் என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது;

| | எல்லோரும் இரகசிய வாக்கெடுப்பு மூலம் | எல்லோரும் இணைக்களத்தால் நியமனம் செய்யப்படல் | இரகசிய வாக்கெடுப்புமூலமும் இலாக்கா நியமனமூலமும் |
|---|---|---|---|
| அங்கத்தவர்கள் | 54-2 | 10-8 | [illegible]-5 |
| ஊழியர்கள் | 26-9 | 11-5 | 61-6 |
| கிளை முகாமையாளர்கள் | 31-5 | 7-2 | 61-3 |
| பொது முகாமையாளர்கள் | 19-3 | 9-7 | 71-0 |
| மக்கள் வங்கி முகாமையாளர்கள் | 18-5 | 7-4 | 7[illegible]-1 |
| அபிவிருத்தி அதிகாரிகள் | 5-3 | 7-9 | 8[illegible]-8 |
| கூட்டுறவுப் பரிசோதகர்கள் | 15-8 | 5-8 | 87 5 |
| கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் | 12-5 | 5-2 | 79-0 |

இந்த அட்டவணையிலிருந்து, பணிப்பாளர் சபைக்கு சில அங்கத்தவர்களை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யவும், சிலரைத் திணைக்களத்தின் மூலம் நியமிக்கவுமான அரசாங்க நடவடிக்கை கூட்டுறவுத்துறை சார்ந்த அதிகாரிகளினதும், ஊழியர்களினதும் அமோக ஆதரவைப் பெற்றுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. எனினும், அங்கத்தவர்களுள் பெரும்பான்மையானோர் இதற்கு மாறாக, பணிப்பாளர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை ஆதரித்தனர். எனினும், அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், அங்கத்தவர்களை உத்தியோக பூர்வமாக நியமித்தல் பிழையென இக்கருத்துக்கள் காட்டுகின்றன எனக் கூறிவிட முடியாது. ஆனால், அரசியலுக்கும் அரசியல் வாதிகட்கும் மதிப்பளித்து மரியாதை செய்ய வேண்டிய நிலைமை, அதன் விளைவாக ஏற்படும் உறவினருக்குச் சலுகை செய்தல், ஊழல், பட்சபாதம் காட்டல் போன்ற வெறுப்புக்குரிய அம்சங்கள் கூட்டுறவுத் துறைக்குப் பேராபத்தைத் தோற்றுவித்துள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் அடிப்படையில் பொருளாதார நோக்கமுடையன; என்னும் பொருளாதாரத்துடன் ஒருவித சமூக சேவை நோக்கமும் அவற்றுக்குண்டு. இவை வர்த்தக ஸ்தாபனங்களாக விளங்கவேண்டுமென எதிர்பார்க்கப்படும் அதே வேளை தமது அங்கத்தவர்களுக்காக சமூக, ஜனநாயக அடிப்படையில் இயங்க வேண்டுமென்ற கடப்பாட்டையும் கொண்டமைந்துள்ளன. இச்சங்கங்களது வர்த்தக இலக்கை எய்தும் சாதனையானது அடிப்படையில் சங்கிலித் தொடர் போன்ற ஓர் ஆணை அமைப்பில் நிகழ்கிறது. பணிப்பாளர் சபையிடமிருந்து பொதுமுகாமையாளர்களுக்கு, அவர்களிடமிருந்து கிளை முகாமையாளர்கள், அவர்கள்மூலம் நுகர்வாளர்கள் என்ற படிமுறையில் இது நிகழ்கிறது. இந்த சங்கிலித் தொடர் அடிப்படையிலேயே இவ்விஷயம் தொடர்பான மீள் கருத்துரையும் நிகழ்கிறது. பங்கு கொள்ளல் இலக்குகளைப் பொறுத்தளவில், ஆரம்ப மட்டத்தில் அவை பொதுக்கூட்டங்கள் மூலமாகவும் பிரதேச (கிளை) மட்டத்தில் குழுக் கூட்டங்கள் மூலமும் எய்தப் பெறலாமென எதிர்பார்க்கப்படுகின்றன.

பணிப்பாளர் சபைக்கும், பொதுமுகாமையாளருக்குமிடையே வலுவான ஒரு தொடர்பு நிலவியதை வங்கியின் ஆய்வு காட்டியது. சபைக் கூட்டங்களின் போது பொதுமுகாமையாளர் பிரசன்னமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தனது நடவடிக்கைகள் காரணமாக சபைத் தலைவருடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்ற இரண்டுமே பரும்பாலும் இதற்கான காரணங்களாக விருந்தன. எனினும், முகாமைச் சங்கிலித் தொடரில் அடுத்த முக்கிய படிநிலையாகக் காணப்பட்ட பொது முகாமையாளருக்கும், கிளை முகாமையாளருக்குமிடையேயான தொடர்பு சார்பு ரீதியாக பலவீனமாகவே காணப்பட்டது. பொது முகாமைத்துறைக்கும், கிளை முகாமையாளருக்குமிடையேயான அதி முக்கிய செய்தித் தொடர்பு எழுத்து மூல பணிப்புரைகள், சுற்றுநிருபங்கள் போன்ற வடிவிலேயே காணப்பட்டன. அதி முக்கிய செய்தித் தொடர்பு முறையான நேருக்கு நேர் சந்தித்துக் கதைத்தல் என்பது மிக மிக அரிதாகவே நிகழ்ந்தது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட கிளை முகாமையாளர்களுட் சுமார் 40 சத வீதமானோர் பொது முகாமையாளரையோ, கணக்காளரையோ குறித்த மூன்று மாத காலத்துக்குச் சந்திக்காது இருந்துள்ளனர். அத்துடன், இதே காலப்பகுதியில், பகிலிறுத்த 70 சத வீதமானோர் கூட்டுவுத் திணைக்கள அதிகாரிகளைச் சந்திக்காது இருந்துள்ளனர். (இந்த அதிகாரிகள் முக்கிய மேற்பார்வை நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.)

இதேபோன்று, கிளைக்கும் அங்கத்தவர்களுக்கும் இடையேயான உறவும் பலவீனமாகக் காணப்பட்டது குறிப்பாக 7- சத வீதமான அங்கத்தவர்கள் சங்கம் இலாபத்தில் இயங்குகின்றதா, நட்டத்தில் இயங்குகின்றதா என்பதைக் கூற முடியாதிருந்தனர். 80 சதவீதமானோருக்கு புனரமைப்புக்கான காரணங்களைக் கூற முடியவில்லை. சங்கங்களின் திறமையின்மைக்குச் சாதகமான காரணங்களைத் தெரிவித்த அங்கத்தவர்கள், அங்கத்தவர்களது கருத்துக்களுக்கு உத்தியோகத்தர்கள மதிப்பளிக்கத் தவறியமையே பிரதான காரணமெனக் குறிப்பிட்டனர். கிளைகளுக்கும் அங்கத்தவர்களுக்குமிடையே உறுதியான தொடர்புகள் காணப்படாமையும் இன்னொரு காரணமாக அவர்கள் தெரிவித்தனர். இரண்டாவது நிறுவன இலக்கான கூட்டுறவு இயக்க நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் விஷயத்தைப் பொறுத்தளவில், பொதுக் கூட்டங்களும், குழுக்கூட்டங்களும் அடிக்கடியன்றி நீண்ட இடைவெளிக்குப் பின்னரே நிகழ்ந்தன எனப் புள்ளி விவரங்கள் காட்டின. எனவே, கூட்டுறவுத் துறையின் இரண்டாவது முக்கிய இலக்கான பொதுமக்கள் பங்குபற்றலானது வெற்றிகரமாக எய்தப்படவில்லை என்பதையே இது கட்டிக்காட்டுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட சேவைகள் நுகர் பொருட்கள், பயிர்ச் செய்கைக்குத் தேவையான உள்ளீடுகள் (உபகரணங்களை, பசளை போன்றன) என்பனவற்றின் விநியோகம், சந்தைப்படுத்துதல் என்பன கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றும் சேவைகளாகும்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

...ன் றி

...க இயக்கத்தைத்தொட...
...னர், ...ப்பட ஓ...ன்
...சாரத்தினுல் தூண்
...பட்ட தொழிலாளர்
...க்கம் தொழிற் சங்கங்
... நிறுவி தமது உரிமை
... வென்றெடுப்பதற்
... வேலை நிறுத்தங்களி
... ஈடுபட்டார்கள்.
...க்குறையஒரு நூற்றாண்டு
...மாகத் தொழிலா
... தொழிற்சங்க மூலம்

...ரியம்

...லூரி, யாழ்ப்பாணம்:

...து பிரச்சினைகளைத் தீர்
... வைப்பதற்குப் பல
...ற்சிகளை மேற்கொண்ட
...திலும் எதுவித பயனும்
...டைக்கவில்லை. முதலாளி
...க்கத்தினர் ஆயுத பல
...தயும் பண பலத்தைத்

...ள்

... பயன்படுத்தி தொழி
...ர் இயக்கங்களை அடக்
...கள். முதலாளிவர்க்
...திற்கும் தொழிலாளர்
...க்கத்திற்குமிடையே
...பெற்ற இப்போராட்
...தை கார்ள் மாக்ஸ்,

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

(முற்றொடர்)

# இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் சேவைகள்

D. M. ஸ்கொட்

வரலாற்று ரீதியாக, குறிப்பாக 1950களின் நடுப்பகுதிவரை, கூட்டுறவுச் சங்கங்களின் சமூக நல பொறுப்புக்களைப பற்றி தலைவர்களிடையே விழிப்புணர்வு நிலை வந்துள்ளது. இந்த உணர்வு பலவேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது. வாழ்க்கைத்தரத்தின் முக்கியத்துவம் குறித்து இலங்கையில் நிலவி வந்துள்ள தேசிய விழிப்புணர்வை இது கோடிட்டுக் காட்டுகின்றது

கூட்டுறவுச் சங்கங்கள் தமது சமூக நலச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதில் 3 காரணிகள் தடையாக இருந்துள்ளன: அவற்றைப் பொருளாதார, நிறுவன, அரசியல் காரணிகள் என வகுக்கலாம்.

இலங்கைக் கூட்டுறவு இயக்கம் நாணய அல்லது கடனுதவு சங்கங்களிலேயே விட்டது இச்சங்கங்கள் உறுப்பினர்களின் பொருளாதார சமூகத் தேவைகளையே பூர்த்தி செய்தன. தமது குறுகிய எல்லைகளுக்கு அப்பால் அவை விரிவடையவில்லை. 1940களின் முற்பகுதியிலே பண்டசாலைச் சங்கங்கள் பெருவாரியாக நிறுவப்பட்டபோதுதான் கூட்டுறவு இயக்கம் இந்நாட்டிலே ஒரு பொருளாதார சக்தியாக விளங்கத் தொடங்கியது எனினும ஆரம்பத்திலிருந்தே இச்சங்கங்களும பின்னர் வந்த ப.நோ.கூ. சங்கங்களும் விற்பனை விலைகள் குறித்து கடும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டன. இதற்குக் காரணம் அவை அத்தியாவசிய பங்கீட்டுப் பொருள்களை வினியோகித்து வந்தமையே. மேலும், இரண்டாம் மட்ட சங்க அடிப்படையில் மொத்த வியாபாரம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தேசிய மட்டத்தில் கூட்டுறவு இயக்கம் மொத்த வியாபாரத்தை ஒரு போதும் மேற்கொள்ளவில்லை. எனவே, கூட்டுறவு வியாபார முயற்சிகளின் மூலம் உருவாகிய மொத்த மேலதிகங்கள் கூட்டுறவு இயக்கத்திற்குக் கிடைக்கப் பெறவில்லை இத்துடன், பண்டசாலைச் சங்கங்கள் நிறுவப்பட்ட நோக்கத்தினால் போலும் மிகச் சில பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களே பங்கீட்டுப் பொருள்களையும் ஒரு சில அத்தியாவசிய பொருள்களையும் தவிர பரவலான வேறு நுகர்ச்சிப் பொருள்களையும் விற்பனைசெய்தன. பெரும்பாலான சங்கங்களைப் பொறுத்தவரை அரிசி, மா, சீனி ஆகியவற்றின் விற்பனைப் பிரட்டு மொத்த நுகர்வுப பொருள் விற்பனைப் பிரட்டில் 70 வீதமாக இருந்தது. இதனால் தமது உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பூரணமான நுகர்வுச் சேவையை வழங்கத் தவறியது மட்டுமன்று பெரும்பாலான விற்பனைப் பொருட்கள் விலைக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தமையால் (இவற்றின் சராசரி மிகை விலை சாதாரண வியாபார மிகை விலைகளிலும் பார்க்க 25 வீதத்திற்கும் குறைவாகவே இருந்தன) மேலதிகம் கணிசமாக மட்டுப்படுத்தப்பட்டது. ஆகவே, தேசிய மொத்த வியாபார நடவடிக்கைகள் இல்லாமையாலும் விற்பனைப் பொருட்களின் பரப்பெல்லை மிகக் குறுகியதாய் இருந்தமையாலும் அடித்தள அமைப்பின் அபிவிருத்திக்கு காலப் போக்கில் தேவைப்பட்ட மேலதிகம் போதாமையாய்இருந்தது. இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார ரீதியாகப் பலவீனமுற்றிருந்தன. அமைப்பு சார்ந்த செம்மையான அபிவிருத்திக்கே இந்நிலை என்றால் சமூக நலத்திட்டங்கள் பற்றிப் பேச வேண்டியதில்லை.

1972—73ல் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்று சங்கங்களையும் பொருளாதார ரீதியாக ஈடேற வைத்தலே. மறுசீரமைப்பிற்கு முன்னர் இருந்த 18ப.நோ.கூ. சங்கங்கள் பண்டசாலைச் சங்கங்கள் ஆகியவற்றில் 983 சங்கங்கள் 16.9 வீதம் இயங்காதிருந்தன 2884 சங்கங்கள் அல்லது 46 வீதம் நட்டத்தில் இயங்கின. எனவே, சிறு சங்கங்களின் ⅓பகுதியே பொருளாதார ரீதியாக இயங்க வல்லனவாய் விளங்கின. இவற்றை 373 பெரிய ஆரம்பச்சங்கங்களாக மாற்றியமைத்தமை பொருளாதார ஈடேற்றத்திற்கு வழிகோலிய போதிலும் சங்கத்திற்கும் உறுப்பினருக்கும் இடையே இருந்த தொடர்பு ஓரளவு குன்றியமைக்கும் வழிவகுத்தது.

புதிய அமைப்பின்படி ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்தின் ஒரு குறிப்பிட்ட கிளையில் உறுப்பினராகச் சேர்ந்து கிளைக்குழுத் தேர்தலில் பங்கு பற்றினர். இவ்வாறு தெரியப்பட்ட கிளைக்குழுக்கள் சங்கத்தின் பொதுச்சபைக்குச் செல்லவேண்டிய பிரதிநிதி அல்லது பிரதிநிதிகளைத் தெரிவு செய்தன. பொதுச்சபை நெறியாளர் குழுவைத் தெரிவு செய்தது. கொள்கையளவில் ஒவ்வொரு உறுப்பினரும் தனது கிளைக்குழுவினூடாக தனது கருத்துக்களைப் பொதுச்சபைக்கும்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு இயக்கம் தோன்றி...

லெனின், றொபேட் ஓவன் போன்றோர் வர்க்கப் போராட்டம் என வர்ணிக்கின்றனர். முதலாளிகளின் ஆயுத பலத்திற்கும் தொழிலாளர்களின் மனித பலத்திற்குமிடையே நடைபெற்ற போராட்டமே வர்க்கப் போராட்டமாகும். ஈற்றில் தொழிற்சங்க இயக்கம் சட்டவிரோதமானது என்று பிரகடனப்படுத்தப்பட்டதும் தொழிற்சங்க இயக்கம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. தொழிற்சங்க இயக்கம் தொழிலாளர்களின் பிரச்சினைகளை நிவிர்த்தி செய்யாமல் தோல்வி கண்டது. தொழிற்சங்க இயக்கம் தோல்வியடைந்ததும் ஆவணர் இயக்கம், கிறிஸ்தவ சோசலிச இயக்கம்போன்ற பல இயக்கங்கள் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சித்த போதிலும் அம்முயற்சிகளும் பூரண வெற்றியைக் கொடுக்காமல் தோல்வியிலேயே முடிவடைந்தன.

தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இயக்கங்கள் யாவும் தோல்வியடைந்த பின்னர் றொபேட் ஓவன், டாக்டர் வில்லியங்கிங், லட்லவ் நீல் போன்ற பெரியார்கள் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கூட்டுறவியக்கமே சிறந்த கருவியெனப் பிரசாரம் செய்தனர் தொழிலாளர்களை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை தொழிற்சாலை முதலாளிகளோ, அரசாங்கமோ முன்வந்து தீர்த்துவைக்காதென்றும் தொழிலாளர்கள் ஒன்றுகூடி ஒரு கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி சுயஉதவி பரஸ்பர உதவியின் அடிப்படையிலேயே தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று போதித்தனர். தொழிலாளர்கள் பிறரை எதிர்பார்க்காமல் தாமாகவே தமது பிரச்சினைகளைத் தீர்க்க முயலவேண்டுமென்றும் அதற்குக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுவதே சிறந்த பரிகாரமென்றும் போதித்தனர். தொழிலாளர்கள் தமது சம்பளத்தில் ஒருபகுதியை சிறிது சிறிதாகச் சேமித்து வைத்து இச்சேமிப்பை பங்குப்பணமாகக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி இச்சங்க மூலமாக தமக்கு வேண்டிய வேலைவசதி, வைத்திய வசதி, உணவு வசதி, கல்வி வசதி, பாதுகாப்பு வசதி போன்றவற்றை இலகுவில் மேற்கொள்ளலாமென்று போதித்தனர். இக்கருத்துக்கள் றொபேட் ஓவன் வெளியிட்ட "பொருளாதார நெருக்கடி" என்ற பத்திரிகையிலும் டாக்டர் வில்லியம் கிங் வெளியிட்ட "கூட்டுறவாளன்" என்ற பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டன. றொபேட் ஓவன் தனது நாவினாலும், பேனாவிலும் கூட்டுறவுச் சங்கத்தின் உயர்ந்த பண்புகளையும், சிறப்பியல்புகளையும் சமுதாயத்தில் விதைத்தார். தொழிலாளரை எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இயக்கங்கள் தோல்வியடைந்தமையுமே கூட்டுறவியக்கம் தோன்றுவதற்கு மூலகாரணமாக இருந்தன. றொபேட் ஓவன் போன்ற பெரியார்கள் மேற்கொண்ட முயற்சிகளும், பிரசாரங்களும் இயக்கத்திற்கு உயிரையும், உருவத்தையும் கொடுத்தன

இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் புரட்சியினால் 19 நூற்றாண்டில் தரகர் என்ற ஒரு புதிய வர்க்கம் தோன்றியது. ஆதிகாலத்தில்உற்பத்தி பெருமளவில் நடைபெறாமையாலும் இலாப நோக்கத்திற்காக உற்பத்தி நடைபெறாமையாலும் தரகர் வர்க்கம் தோன்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆதியில் நுகர்வோர் உற்பத்தியாளர்களுடன் நேராகத் தொடர்பு கொண்டு தமக்கு வேண்டிய பொருட்களைப் பெற்றுக்கொண்டனர். 19 ம் நூற்றாண்டில் சுய தேவை உற்பத்தி மறைந்து இலாப நோக்க உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டமையால் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையிலான இடைத்தூரம் பெருகியது. உற்பத்தியாளன் இங்கிலாந்தில் இருந்தால் அப்பொருட்களை நுகர்வோர் ஆசியாவிலோ, ஆபிரிக்காவிலோ இருந்தனர். எனவே உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையே தரகர், முகவர், பிரதிகர்த்தாக்கள் போன்றோர் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. 19 ம் நூற்றாண்டில் தரகர் வர்க்கம் சமுதாயத்தில் அதிக செல்வாக்குப் பெறத் தொடங்கினர். இவர்களுடைய உதவியும் ஆதரவும் இல்லாமல் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு இயங்கமுடியாத நிலை ஏற்பட்டது. தரகர் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் நின்று பொருட்களின் விலையை அதிகரித்தனர். நுகர்வோர் தரமற்ற பொருட்களைக் கூடுதலான விலையில் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தரகர் வர்க்கத்தினால் நுகர்வோர் மட்டுமன்றி உற்பத்தியாளர்களும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டார்கள். விவசாயிகளையும் சிறு உற்பத்தியாளர்களையும் தரகர் வர்க்கம் ஏமாற்று உற்பத்திப் பொருட்களை குறைந்த விலைக்கு பெரிய முதலாளித்துவ முதலைகளுக்கு வாங்கிக் கொடுத்து கொழுத்த தரகு பெற்றனர் சமுதாயத்தில் நிலைபெற்றுள்ள முதலாளித்துவச் சுரண்டலிலிருந்தும், தரகர் வர்க்கத்தின் கொடுமையிலிருந்தும் உற்பத்தியாளர்களையும் விவசாயிகளையும் பாதுகாக்கக் கூட்டுறவியக்கமே சிறந்த மருந்தென்று கருதப்பட்டமையால் கூட்டுறவியக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இங்கிலாந்தில் கூட்டுறவியக்கம் நுகர்வோர் கூட்டுறவியக்கமாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இங்கிலாந்தில் நிலவிய உணவுப் பிரச்சினையேயாகும். இங்கிலாந்தில் 19 ம் நூற்றாண்டில் என்றுமே கண்டிராத அளவில் உணவுப் பிரச்சினை தோன்றியது நாட்டில் முக்கிய உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. கூடுதலான இலாபத்தை ஈட்டக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதிலே தான் நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. உள்நாட்டில் சிறுநில விவசாயம் செய்துகொண்டிருந்த விவசாயிகள் அனைவரும் தொழிற்சாலையில் வேலை செய்ய வந்தமையால் உள்நாட்டு விவசாயமும் வீழ்ச்சியடைந்தது. விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டு தொழிற்சாலைக்கு வந்ததும் நிலச் சொந்தக்காரர்கள் பெரிய பண்ணைகளை உருவாக்கிப் பெரும் படியாக்க உற்பத்தியில் ஈடுபட்டமையால் உற்பத்திச் செலவு பன்மடங்காக அதிகரித்து தானியங்களின் விலை பன்மடங்காக அதிகரித்தது.

உணவு உற்பத்தி குன்றிய நேரத்தில் நாட்டுக்குப் பெருந்தொகையான உணவும் தேவைப்பட்டது. ஏனைய நூற்றாண்டுகளை விட 19 ம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் சனத்தொகை பன்மடங்காக அதிகரித்து உணவுத் தேவை கூடியது, தொழிற்சாலையில் தொழிலாளர்கள் கடினவேலையில் ஈடுபட்டமையால் அவர்களின் ஊண் சக்தி கூடி உணவுத் தேவை அதிகரித்தது. உள்நாட்டு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்தி இடம் பெறாத நேரத்தில் வெளிநாட்டிலிருந்து தானியம் இறக்குமதி செய்வதும் தடுக்கப்பட்டது. முதலாளித்துவ விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை கூடுதலான விலையில் விற்பதற்காக அரசாங்கத்தைத் தூண்டி 1815 ம் ஆண்டு தானியச் சட்டத்தை உருவாக்கினர். இச்சட்டத்தின் பிரகாரம் பிரான்ஸ், பெல்சியா போன்ற நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குத் தனியம் இறக்குமதி செய்வது தடுக்கப்பட்டது. உள்நாட்டு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் உள்நாட்டு உற்பத்தி இடம் பெறாத நேரத்தில் வெளிநாட்டு இறக்குமதியும் தடுக்கப்பட்டமையால் நாட்டில் பெரியதோர் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் பட்டினியாலும் பஞ்சத்தாலும் தவித்தனர். உணவுப் பொருட்களின் விலை பன்மடங்காக அதிகரித்தது.

உணவுத் தட்டுப்பாடான நிலையைப் பயன்படுத்தி முதலாளிவர்க்கத்தினர் தொழிலாளர்களையும் பாமரமக்களையும் வலுவாகத் துன்புறுத்தத் தொடங்கினர். கறுப்புச் சந்தையும் பதுக்கலும் சமுதாயத்தில் குடிகொண்டது. தரமற்ற பொருட்களை நியாயமற்ற விலையில் விற்று மக்களைத் துன்புறுத்தினார்கள், முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து விடுபட்டு தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவவேண்டுமென்று றொபேட் ஓவன் போன்ற தலைவர்கள் பிரசாரம் செய்தனர். இப்பிரசாரங்களினால் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவத் தொடங்கினர். (முற்றும்)

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கையில் கூட்டுறவுச்...

நெறியாளர் குழுவிற்கும் தெரிவிக்கலாம். ஆனால் நடைமுறையில் குறிப்பாக நியமனம் பெற்ற நெறியாளர் நெறியாளர் குழுவில் ஆதிக்கம் பெற்றிருந்த போது தனிப்பட்ட உறுப்பினர்கள் சங்க அலுவல்களில் எடுத்துக் கொண்ட அக்கறை படிப்படியாகக் குறைந்து அவர்கள் மௌனம் சாதிக்கத் தலைப்பட்டனர். எனவே, சமூக நல நடவடிக்கைகள் உட்பட சங்க அலுவல்கள் பற்றி உறுப்பினர்களின் கருத்துக்கள் வெளிப்படவில்லை.

பல ஆண்டுகளாக இலங்கைக் கூட்டுறவு இயக்கத்திலே அரசியல் தலையீடு அல்லது உற்சாகப்படுத்தல் — இது ஒவ்வொருவரின் நோக்குக் கோணத்தைப் பொறுத்தது-நிகழ்ந்து வந்திருக்கிறது. இயக்கத்தின் பெரும்பகுதியிலேகூட்டுறவுக் குடியாட்சி குன்றியது பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். மேலும், நீண்டகாலமாகக் கூட்டுறவு இயக்கத்திற்குப் பின்வரும் துறைகளிலே உதவி வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இலவச கணக்குப் பரிசோதனை ஆலோசனைச் சேவைகள் நிதிச் சலுகைகள் (முத்திரை வரி பதிவுக் கட்டணம், வருமானவரி ஆகிய வற்றிலிருந்து விலக்கு) கல்விப் பயிற்சி முயற்சிகளுக்கு உதவி, அரசாங்க திணைக்களங்களினூடாக கடன்களும் நன்கொடைகளும் தல், பாவனைப் பொருட்கள் பங்கீடு, விளைபொருள் சந்தைப் படுத்தல் ஆகியவற்றின் வியாபாரமும்ஏக போக முன்னுரிமையும் ஆகியவற்றை இங்கு குறிப்பிடலாம். இத்தகைய உதவிகள் மிகச் சிறந்த நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால் இரண்டு வகைகளில் இவற்றின் பெறுபேறுகள் துரதிஷ்டமானவை எனலாம். கூட்டுறவுச் சங்கங்களின் சுய ஆதாரத்தையும் தன்னம்பிக்கையையும் இவை பங்கப் படுத்தி விட்டன. அத்துடன் அரசாங்க முடிவுகளிலே கூட்டுறவு இயக்கம் தங்கியிருப்பதை அது அதிகரித்தது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு விசேட சலுகை எதுவும் இருத்தலாகாது, தனியார்துறையுடனும், பொதுத்துறையுடனும் சரிசமமாகப் போட்டியிடவேண்டும் என்பதே இன்றைய அரசாங்கத்தின் கொள்கை. இதனால் கூட்டுறவு இயக்கம் தனது திசைநெறியை முற்றாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

பின்னர் குறிப்பிடப்படவிருக்கும் உதாரணங்களிலிருந்து சமூக நல செயற்பாடுகள் பற்றிய கூட்டுறவு உற்சாகமளித்த போதிலும், சங்கங்களின் முக்கிய உடனடி அக்கறை பொருளாதார ரீதியாக உயிர் வாழ்தலே.

(வளரும்)

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு...

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் பல்வேறு சேவைகளுள், பங்கீட்டுப்பொருள்களை விநியோகம் செய்வதே அங்கத்தவர்கள் பலரது கருத்துப்படி அவற்றின் அதி முக்கிய பணியாகவுள்ளது. பயிர்ச்செய்கைக்கான உள்ளீடுகளை விநியோகம் செய்தல் இரண்டாவது இடத்தையும், பங்கீட்டுக்கல்லாத நுகர்பொடுட்களை விநியோகம் செய்தல் மூன்றாம் இடத்தையும் பெறுகின்றன. கிளைகளின் முகாமையாளர்களும், அத்தியாவசியமானவையும் அரிதானவையுமான நுகர்பொருட்களை பாவனையாளர்கட்கு விநியோகம் செய்தல் கூட்டுறவுச் சங்கங்களின் முதல் முக்கிய நோக்கமெனக் குறிப்பிட்டனர் (45 சதவீதமானோர் இங்ஙனம் கருதுகின்றனர்); அத்துடன் அவ்வப் பிரதேச உற்பத்திப் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்தல் இரண்டாம் இடத்தைப் பெறுகிறதெனவும் இவர்கள் தெரிவித்தனர். (21 சதவீதமான முகாமையாளர்கள் இக் கருத்தைக் கொண்டு காணப்பட்டனர்.)

அங்கத்தவர்களது புகார்களை ஒழுங்குபடுத்தி ஆராய்ந்து பார்த்ததில், 78 சதவீதமான புகார்கள் நுகர்வோர் விவகாரங்கள் சம்பந்தப் பட்டனவாகவே காணப்பட்டன;

(தொடர்ச்சி 8 ம்பக்கம் )

# நீர்ப்பாசனக் குளங்களிலிருந்து வெளியாகும் நீரினைப் பயன்படுத்துதல்

1973 இறுதிப் பாகத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட குறைந்த எண்ணெய் உற்பத்தியையும், எண்ணெய் விலை உயர்வினையும் தொடர்ந்து இந்நூற்றாண்டின் இறுதியில் உலகில எண்ணெய்க்கிணறுகள் யாவும் வற்றிவிடலாம் என பீதி பரவியது; இதனையடுத்து மாற்று வலு மூலங்களைத் தேடும் முயற்சியில் உலகின் கவனம் திரும்பியது நம நாடு கூடிய நீர்மின்வலு ஆற்றலையும், ஏனைய வலுவளங்களையும் பெற்றிருந்தும் கூட எண்ணெயில் தொடர்ந்தும் தங்கியிருந்தமை கவலையளிப்பதாகவே இருந்தது, எண்ணெய்க் கிணறுகள் வற்றிவிட்டாலும் கூட உலைக்கழிவு, சூரிய உஷ்ணம், காற்று; நீர்வீழ்ச்சி போன்ற மாற்று வலு மூலங்களிலிருந்து எளிய தொழில் நுட்பங்கள் மூலம் வலுவைப் பெறலாம். பெரும்பாலான நாடுகளில் மாற்று வலுமூலங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சிறிய வலுமூலங்கள் தொடர்பான பயன்பாடு கூடிய கவனத்தைப் பெற்று வருகின்றது. நீரின் வேகமான அல்லது வேகம் குறைந்த கன பரிமாணத்திற்கேற்ப பொறி உருளைகளை அமைப்பதன் மூலம் உள்ளூர்த்தேவைக்குப் போதுமான சிறியளவிலான மின்சக்தியை உற்பத்தி செய்து கொள்ளலாம். இம் முறை மீண்டுமொரு தடவை மேற்கு நாடுகளில் செல்வாக்குப் பெற்று வருகின்றது. மேலும் சீனாவில் கிராமியப் பாவனைக்காக வேண்டி 50 கிலோ வோட்ஸிற்குக் குறைவான சிறிய மின் உற்பத்தி அலகுகள் ஆயிரக்கணக்கில பொருத்தப்பட்டுள்ளன.

இத் துறையில் சீனாவின் அனுபவத்தை ஆராய்ந்தறியும் பொருட்டு பொறியியலாளர் குழுவொன்றினை அனுப்ப அரசாங்கம் உத்தேசித்துள்ளமை- சிறிய மின சக்தி உலைகளும், அவற்றின் பரவலான பாவனையும் அண்மைக் காலத்தில் பெற்றுள்ள முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது, பல்வேறு நாடுகளிலுமுள்ள பொறி உருளை உற்பத்தியாளர்கள் ( TURBINE ) ½ கிலோ வோட்ஸ் மின் வெளியீட்டுச் சக்தியுடனான பொறி உருளைகளைத் தயாரிக்கின்றனர் என்பதனை தற்கால தொழில் நுட்பவியல் அளவீடுகள் மூலம் அறிய முடிகின்றது. ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட நீர் மின் பொறி உருளைத் தயாரிப்பாளர்கள் ½ கிலோவோட்ஸ் நீர் மின் அலகுகளை அபிவிருத்தி செய்துள்ளனர். ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஒரு நீர் மின் பொறி உருளைத் தயாரிப்பாளரிடம் கேட்ட மாத்திரத்தில் 06—10 கிலோவோட்ஸ்வரையிலான மின் வெளியீட்டு அலகுகளைப் பெறலாம். 8 அடிகள் முதல் 10 அடிகள் வரை வேறுபட்ட அளவுகளில் பொருந்தும் வகையில் ஒவ்வொரு வலு வெளியீட்டிற்கும். பல நீர் மின் பொறி உருளைகள் வழங்கப்படுகின்றன. இந்த அலகுகள், பொருத்தப்பட்ட வெட்டு அலகுகளுடனான' உந்துவிசைத் தன்மைகொண்ட— நீர் மின் பொறி உருளைகளைக் கொண்டிருப்பதுடன், நேரடியாகவே மின் உற்பத்திக் கருவியுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிணைக்கப்பட்ட அலகுகளுடன் மரபு முறையிலான 'பிரான்சிஸ்' நீர் மின் பொறி உருளையையும் தயாரிப்பாளர்கள் வழங்குகின்றனர்.

சோவியத் யூனியன் பெருமளவிற்கு மேலே விவரிக்கப்பட்டதனையொத்த இணைப்பு—உந்துதல் அலகுகளைத் தயாரிக்கின்றது. இங்கிலாந்திலுள்ள ஒரு நிறுவனம் 10 கிலோவோட்ஸ் வரை குறைந்த அளவிலான அலகுகளை வழங்குகின்றது. இத்தகைய சிறியளவிலான நீர் மின் அலகுகளைத் தயாரிக்கும் பல நிறுவனங்கள் கனடா, மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்விட்சலாந்து ஹங்கேரி, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் இருக்கின்றன,

மக்கள் சீனக் குடியரசில் நம்பகமான சிறு தொழில் நுட்பத்துடனும், சிறியளவிலுமான நீர்மின் அலகுகள் பாவனையிலுள்ளன என்பதனை கிடைக்கப்பெற்றுள்ள செய்திகள் காட்டுகின்றன கிராமப்புறங்களில் இவை வேகமாகப் பிரபல்யம் பெற்று வருவதனையும் இச்செய்திகள் மூலம் அறிய முடிகின்றது. இங்கு 100 கிலோவோட்ஸிற்குக் குறைவான கொள்ளளவு கொண்ட ஆயிரக்கணக்கான அலகுகள் பொருத்தப்பட்டுள்ளன. 10 கிலோ வோட் நீர் மின் உலையொன்றிற்குரிய மரத்தினாலான பொறி உருளையொன்றும இதனுள் அடங்கும்.

24ம் சமாந்தரத்துக்குத் தெற்காக கூடிய மழையைப் பெறுகின்ற ஒரு நாடாக சீனா விளங்குவதனால் நீர் மின் சக்தியை அபிவிருத்தி செய்ய முடிகின்றது. 1975ம் ஆண்டில் ஏறக்குறைய 60,000 நீர் மின் உலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன இவற்றுள் 95 சதவீதத்திற்கும் மேலானவை நாட்டின் ஈரலிப்பான தென்பகுதியில் அமைந்துள்ளன.

ஏறக்குறைய 4? கிலோவோட்ஸ் அளவினதான இவற்றுள் பெரும்பாலானவை மிகச் சிறியவையாகும் இவை நான்கு வட அமெரிக்க சமையல் அடுப்புகளுக்கு வலுவினை அளிக்கப் போதுமானதாக இருப்பதுடன், வீட்டிற்கு ஒளி வழங்குதல் (ஒரு வீட்டிற்கு ஒன்று அல்லது இரண்டு 15—40 வோட்ஸ் மின்குமிழ் வீதம்), நீரிறைத்தல் (1 கிலோவோட்ஸினைக் கொண்டு உள்ளூர் நீர்ப்பாசனம் வடிகால் வதிபோன்றவற்றை இயக்கலாம்') நெல் அரைத்தல், அரிசியை மாவாக்கல் போன்ற தொழிற்செறிவு மிக்க நடவடிக்கைகளுக்கும் பாவிக்கப்படுகின்றன. உள்ளூர் நீர் மின் சக்தியினால் இயங்கும் இயந்திரங்களின் மூலம் தானியங்களைச் சுத்திகரிப்பதனால் மட்டும் வருடாந்தம் 10 லட்சம் வேலை நாட்கள் சேமிக்கப்படுவதாக தென் சீனாவின் ஒரு பிராந்தியத்தின அறிக்கைகள் கூறுகின்றன

இவ்வாறு பெரும்பாலான நாடுகளில் சிறிய நீர் மின் உலைத் தொழில் நுட்பம் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளதுடன், ½ கிலோ வோட்ஸ் அளவு குறைவான வெளியீட்டினைக் கொண்ட அலகுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை அறிய முடிகின்றது. 250—3000 கிலோவோட்ஸ் வரையிலான வலு அலகுத் தொழில் நுட்பமும் அபிவிருத்தியடைந்துள்ளது சுவிட்சர்லாந்து, இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகளில் 20—75 அடிகளினாலான தலைகளுடன் 500—3000 கிலோவோட்ஸ் அளவினதான பொறி உருளை அலகுகளைத் தயாரிப்பதற்கான முயற்சியினை தயாரிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளனர். ஜப்பானில் நீர்ப்பாசனத்திற்குரிய நீரிலிருந்து 20 — 70 அடிகள் உயரமான தலைகளுடன்' 1000 கிலோவோட்ஸ் கொள்ளளவுடைய நீர் மின் உலைகள் தயாரிக்கப்படுகின்றன. பாரிய திட்டச் செலவுகளுடன் சிறிய உலைகளின் அலகுச் செலவுகளை ஒப்பிடுமிடத்து சாதகமாகவே உள்ளது

வட மத்திய மாகாணத்தில் உள்ள எமது பெரும்பாலான நீர்த் தேக்கங்கள் 200 கியூசெக் நீரினை வெளிவிடுகின்றன. உதாரணமாக மின்னேரியாக் குளம் உயர்ந்த எல்லையில் 5? கியூசெக்கினையும், சராசரியாக 230 கியூசெக்கினையும் வெளிவிடுகின்றது. பராக்கிரம சமுத்திரம், உயர்ந்த எல்லையில் 5?0 கியூசெக்குகளையும், சராசரியாக 300 கியூசெக்குகளையும் வெளிவிடுகின்றது. இத் துறையில் தற்போதைய தொழில் நுட்பத்தினை நோக்குமிடத்து, நீர்த்தேக்கங்களின் நீர்ப்பாய்ச்சலின் மூலம் இயங்கக் கூடிய சிறிய நீர் மின் வலு உலைகளைப் பொருத்துவது மிகவும் இலகுவான காரியமாகும்.

1963ம் ஆண்டளவில் அரசாங்க மின்சாரத் திணைக்களத்தின் நீர் மின் அபிவிருத்திப் பகுதியினால் மின்னேரியாவில் ஒரு சிறிய நீர் மின் வலு உலையொன்றினை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட பொழுது 550 கிலோவோட்ஸ் கொள்ளளவு கொண்ட உலையொன்று தேவையெனப்பட்டது. உரிய திட்டம் தயாரிக்கப்பட்டு கேள்விப்பத்திரங்கள் பெறப்பட்ட பொழுதிலும், தேசிய மின்சாரத் திட்டத்திலிருந்து மின்னேரியாவிற்கு மின்சாரம் வழங்குவதற்கான முன்மொழிவுகள் காரணமாக மின்னேரியாவில சிறிய நீர் மின் உலைகளைப் பொருத்தும் திட்டம் கைவிடப்பட்டது,

மகாவலி கங்கையை வட மத்திய பகுதிக்குத் திசை—திருப்பும் முயற்சியுடன் இத்தகைய உலையின் எதிர்கால வாய்ப்பு மேலும் அபிவிருத்தியடைந்துள்ளது எனலாம். மின்னேரியாக் குளத்திற்கான இம் மேலதிக நீர்ப்பாய்ச்சலின் காரணமாக கூடிய கொள்ளவு கொண்ட — 000 கிலோவோட்ஸ் — உலையொன்றினைப் பொருத்தலாம். நீர்ப்பாசனத்திற்கு நீர்வழங்குந்தன்மைக்கு ஏற்ப இவ்வுலையினால் வருடாந்த ஏறக்குறைய 4 மில்லியன் அலகு வலுவினை உற்பத்தி செய்யலாம்.

மின்னேரியா வலு உலை ஒரு மாதிரித் திட்டமாக அமைவதுடன் இதனையொத்த வலு உலைகளை ஏனைய நீர்த்தேக்கங்களிலும் நிறுவலாம். கலாவெவ, ராஜங்கனை, பராக்கிரம சமுத்திரம் பதவியா கவுடுள்ள, ஹுருலுவெவ, நாச்சதூவ போன்றன இத்தகைய நீர் மின்வலு உலைகளை நிறுவுவது பற்றி ஆராயக்கூடிய நீர்த்தேக்கங்களாகும்.

இப் பாரிய நீர்த்தேக்கங்கள் தவிர, கூடிய சக்தியினைக் கொண்ட நீர் மின் — வலு உலைகளை நிறுவக் கூடிய 300 சாதாரண அளவிலான நீர்த்தேக்கங்களும் உள்ளன.

ஸ்ரீ லங்காவின் வலுத் தேவையை நோக்குமிடத்து நீர்த்தேக்கங்களிலிருந்து நீர்ப்பாசனத்தின் பொருட்டு வெளிவிடப்படும் நீரிலிருந்து சிறிய நீர் மின் வலு உலை மூலம் வலுவினைத் தயாரிப்பது அத்தியாவசியமாகும். மலைநாட்டிலுள்ள சிறிய நீரோடைகளைப் பயன்படுத்துவது தொடர்பாகவும். நடவடிக்கையெடுக்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் தேயிலை தோட்டங்களில் உள்ள சிறிய நீர்மின்வலு உலைகளை இயக்க இது பயன்படுத்தப்பட்டது. — நன்றி

பொருளியல் நோக்கு

சிறந்த தரமுள்ள பொருட்களைப்பெற
கூட்டுறவின் ஆக்கப்பணிக்கு உதவுங்கள்.
குறைந்த விலையில் நிறைந்த பயன்தரும்

பண்கோப் சேட்வகைகள்
பண்கோப் காற்சட்டைகள்
பண்கோப் நைலெக்ஸ் சேலைகள்,
சூட்டிங் வகைகள்.
நல்லெண்ணெய்
நீல சவர்க்காரம்
கைத்தறிப் புடவைகள்
பாண், பிஸ்கட், கேக் வகைகள்

ஆகியவற்றை

பண்டத்தரிப்பு பரிஷ
ப.நோ.கூ.சங்கத்தில்
பெற்றுக்கொள்ளுங்கள்

தொலைபேசி இல. பண்டத்தரிப்பு 808

# இந்திய இலங்கைக் கூட்டுறவு இயக்கங்களிடையே உறவு

இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு. B. S. விஸ்வநாதன் அண்மையில் இலங்கைக்கு விஜயஞ் செய்து இங்கு ஒரு வாரம் தங்கியிருந்தார். இலங்கையில் கூட்டுறவு இயக்கத்திற்கு இந்திய கூட்டுறவு இயக்கம் வழங்கக் கூடிய உதவிகள் பற்றி அறியும் முகமாகவே அவர் இங்கு விஜயஞ் செய்திருந்தார்.

உணவு, கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹெரத் ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எம். ஆர். பி. தாஸ்வத்த ஆகியோருடனும் கூட்டுறவுப் பிரமுகர்கள், உத்தியோகத்தர்கள் முதலியோருடனும் அவர் கலந்துரையாடினுர்.

இக்கலந்துரையாடலின் விளைவாக இருநாடுகளின் கூட்டுறவு இயக்கங்களுக்கிடையே நிலவிவரும் உறவுகளை மேலும் பலப்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இரு நாடுகளைச் சேர்ந்த கூட்டுறவு இயக்கங்களும் கொள்கை ரீதியாக பின் வரும் விடயங்களில் உடன்பாடு செய்து கொண்டன:

(1) இரு இயக்கங்களுக்கிடையேயும் கருத்துக்கள், செய்திகள், அனுபவங்கள், சிறப்புத்திறமைகள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்வதோடு நெருங்கிய ஒத்துழைப்பைப் பேணல்.

(2) ஒரு நாட்டைச்சேர்ந்த கூட்டுறவாளர்கள் மற்ற நாட்டிலுள்ள அபிவிருத்திகள் பற்றிக் கற்பதற்கு வசதிகளை வகுத்தல்.

(3) விவசாயக்கடன், கூட்டுறவு முகாமை, கூட்டுறவு வங்கியியல், கூட்டுறவு சந்தைப்படுத்தல், கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய துறைகளில் இலங்கைக் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப் பணியாளர்களும் பயிற்சி பெறுவதற்குரிய வசதிகளை இந்தியக் கூட்டுறவு இயக்கம் வகுக்க வேண்டும். இலங்கைக் கூட்டுறவு இயக்கம் இந்தியக் கூட்டுறவு இயக்கத்துடன் கலந்து பேசியபின் பொருத்தமான செயல் திட்டங்களை வகுப்பது பற்றி ஆய்வு செய்தல்.

(4) இரு கூட்டுறவு இயக்கங்களும் மேலும் வளர்ச்சியடைவதற்கு இணைந்த கூட்டுறவு வியாபாரம் நடாத்துவது பற்றி ஆய்வு செய்தல்.

(5) இரு கூட்டுறவு இயக்கங்களும் இடைப்பட்ட கூட்டுறவு வியாபாரத்தை இயன்றளவு மிகக் கூடுதலாக அதிகரிப்பதற்குரிய சகல நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தல்.

(6) அரசின் கட்டுப்பாட்டின் மூலம் நிருவாக சபைகளை மேற்பார்வை செய்தல், நெறியாளர்களை நியமனம் செய்தல், அரசாங்க நிருவாகிகளைத் தெரிவு செய்தல் போன்றவற்றால் கூட்டுறவுச் சங்கங்களின் சுதந்திரம் அழிக்கப்படுவது குறித்து இரு இயக்கங்களும் மிகுந்த அக்கறையுடன்நோக்கியது. தன் விருப்பார்ந்ததும், ஜனநாயகக் கட்டுப்பாடும் மிக்க இயக்கத்தின் பண்புகளை மீட்பதற்கும் தன் விருப்புஜனநாயகக் கட்டுப்பாடு, சுய உதவி, ஒருவருக்கொருவர் உதவி ஆகிய கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்ட பலம் மிக்கதும், தன்னில் தானே தங்கியிருப்பதும் சுதந்திரமுள்ளதுமான இயக்கத்தைத் திருப்பியமைப்பதற்கும் இயன்றளவு சகல வழிகளிலும் உதவும் வகையில் அரசாங்கங்கள் சிறந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வேண்டப்பட்டது. இந்த முடிவின்படி தாம் மிகக் குறுகிய காலத்தில் பயனை அடைவதற்கு அனைத்துலகக் கூட்டுறவு இணைப்புச் சம்மேளனம் தனது சிறந்த உழைப்புக்களை அரசாங்கத்திற்கு உதவும் வகையில்பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

# கூட்டுறவு...

நுகர்பொருட்களின் விநியோகம், நிறை குறைத்து விற்பனை செய்தல் போன்ற புகார்களே குறிப்பாகக் காணப்பட்டன. கூட்டுறவுச் சங்க ஊழியர்களுட் பெரும்பன்மையானேரது கருத்துப்படி விநியோகம் செய்தற்கான பொருள்கள் பற்றாக்குறையாக விருப்பதே கூட்டுறவுச் சங்கங்களின் விருத்திக்குப் பெருந்தடையாவுள்ளது.

பயிர்ச் செய்கை உள்வீடுகளின் விநியோகம் கடன் நடவடிக்கைகளுடன் தொடர்புற்றுக் காணப்படுகிறது. அங்கத்தவர்களது அபிபபிராயப்படி, கடன் வசதிகளை வழங்குதலும், பயிர்ச் செய்கை உள்வீடுகளை விநியோகிப்பதுமே கூட்டுவுச் சங்கங்களின் இரண்டாவாது அதி முக்கிய பணியாகும். மேலும் கூட்டுறவுச் சங்கங்களில் தாம் எதிர் நோக்கிய பிரச்சினைகளுள், கடன் வழங்கலில் காட்டப்படும் தாமதமே அதிமுக்கியமான தெனப் பல அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

கூட்டுறவுச் சங்கங்களின் இன்னெரு முக்கிய பணி உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தலாகும் இவ் விஷயத்தில் அங்கத்தவர்கள் அடிக்கடி எதிர்நோக்கிய பிரச்சினைகளுள், கொள்வனவு செய்யப்படும் பொருள்களுக்குப் பணம் வழங்களில் உள்ள தாமதம் அளவை நிறுவையில் குளறுபடிகள் முதலியவையே முக்கியமானவையாக இருந்தன.

கூட்டுறவுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளி விபரங்களின் பிரகாரம், புனரமைப்பின் பின்னர் கூட்டுறவு இயக்கத்தின் இலாபம் பொதுவாக அதிகரித்தே வருகிறது. புனரமைப்பைத் தொடர்ந்து கூட்டுறவு இயக்கத்தின் பணிகளும் செயற்பாடுகளும் முன்னர் இருந்ததைவிட மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இலாபத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, இயக்கத்தின் பணிகளின் விஸ்தரிப்பு காரணமாக ஏற்பட்ட அதிகரித்த வருமானத்தின் விளைவாகும். இதே புள்ளி விவரங்களின்படி இக் காலப்பகுதியில், நட்டமும் அதிகரித்துள்ளது.

பொது முகாமையாளர்களது கருத்துப்படி, நட்டங்களுக்கான முழு முதற் காரணம் நுகர்பொருள் பற்றாக்குறையாகும் போக்குவரத்துப் பிரச்சினைகள், ஒழுங்கீனங்கள், அரசியற் தலையீடுகள் என்பன அடுத்த முக்கிய காரணிகளாகக் காணப்பட்டன அவர்களது அபிபிராயப்படி இக்காரணிகள் எவ்வகையிலும் ஒன்றுக்கொன்று குறைவாகக் காணப்படவில்லை இச்சங்கங்களின் கணக்குப் பரிசோதனை விவரங்களைப் பார்த்தபோது, பொருள் விரயமையே Leakages கணக்குப் பரிசோதகர்களால் முக்கிய குறைபாடாகச் சுட்டிக்காட்டப் பட்டிருந்ததைக் காண முடிந்தது. கடன்களைத் திரும்பச் செலுத்தத் தவறியமை இரண்டாவது முக்கிய காரணமாக இருந்தது முகாமைத் துறையின் வசதி கருதி அறிமுகம் செய்யப் பட்ட ஊக்குவிப்புத் திட்டம், மதிப்பீட்டுக்குட் படுத்தப்பட்ட பொது முகாமையாளர்களுள் கிட்டத்தட்ட அரைவாசிப்பேரால் பின்பற்றப்பட்டதுடன், இங்ஙனம் பின்பற்றியோருள் 60 சதவீதமானேர் இத்திட்டம் வெற்றியளித்த தெனவும் குறிப்பிட்டனர்.

## கூட்டுறவு வல்லுநர் கலந்து கொள்வர்

அனைத்துலக கிழக்காசிய நாடுகளின் கூட்டுறவு வல்லுனர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கும் மகா நாடும் ஏப்ரல் 30 ம் திகதி திருக்கோணமலையில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபையினுல் ஒழுங்கு செய்யப்பட்ட இம் மகா நாட்டையும் கருத்தரங்கையும் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் எஸ். பி ஹெரத் ஆரம்பித்து வைப்பார், இது ஒரு வாரம் தொடர்ந்து நடைபெறும்.

அன்றைய தினம் தேசிய கூட்டுறவுச் சபையின் திருக்கோணமலை மாவட்ட சபையின் புதிதாகக் கட்டப்பட்ட அலுவலகமும் பயிற்சி நிலையமும் திறந்து வைக்கப்படும்.

# தமது சங்கம் என்ற உணர்வு இல்லை

## அரசியல் தலையீடு காரணம்

கூட்டுறவுப் பிரசாரக் கூட்டங்களுக்கு சங்க உறுப்பினர்கள் இப்போது சமூகமளிப்பது குறைவாக இருக்கிறது. சங்கத்தின் அலுவல்களிலும் பலருக்கு உற்சாகமில்லாதிருக்கிறது. கூட்டுறவுப் பணைப்புறக் கணிக்கும் அரசியல் தலையீடுகள் மக்களுடைய மனதிலே தமது சங்கம் என்ற உணர்வை மரக்கும்படி செய்து விட்டமைதான் இவை எல்லாவற்றிற்கும் காரணம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் மாவட்டக் குழுத் தலைவர் திரு. சு. கந்தையா மேற்படி குழுவின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

திரு சந்தையா மேலும் பேசுகையில் கூறியதாவது: கூட்டுறவு மறுசீரமைப்புக் குழு மக்களின் இயக்கமாக கூட்டுறவு இயக்கத்தை முன்பு போல் அங்கத மக்களின் கைகளில் கொடுக்க வேண்டுமென அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது இத்தகைய நிலை ஏற்படுவது வரவேற்கத்தக்கது. கூட்டுறவு இயக்கத்தில் உழைக்கும் அனைவரும் இந்த இயக்கத்தினை மக்களது இயக்கமாக மாற்றியமைக்க தம்மால் இயன்ற முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

செயலாளர் திரு: க. கணேசலிங்கம் கடந்த வருடாந்தக் கூட்ட அறிக்கையையும் ஆண்டறிக்கையையும் சமர்பித்தார்

திரு. த கந்தசாமி முன்மொழிய திரு. சி சிவஞானம் வழி மொழிய வருடாந்தக் கூட்ட அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. த கந்தசாமி முன்மொழிய திரு ஆ மயில்வாகனம்வழி மொழிய ஆண்டறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது'

கைத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதியாக திரு S S ராஜேந்திரனும், ஏனைய சங்கங்களின் பிரதிநிதியாக திரு எம். எஸ். பேரின்பநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(1)ம் பக்கத் தொடர்ச்சி)

# ஆழமாகப்...

ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் மனதில் நிறைந்த இந்த வைபவத்திலே உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமது பேச்சின் ஆரம்பத்தில் திரு. மூளுசையா இந்தியப் பிரதமர், இந்திய கூட்டுறவு அமைச்சர், இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர் ஆகியோர் இலங்கைக்கு அண்மைக்காலங்களில் வருகை தந்தமை நன்மதிப்பால் எம்மை உயர்த்திவிட்டது என்று குறிப்பிட்டார்.


"மில்க் வைற் அப்பியாசக் கொப்பி"

00 மில்க்வைற் நீலசோப்

அல்லது

25 மில்க்வைற் பார்சோப்

அல்லது

10 மில்க்வைற் ஒரு இரசலவைப் பவுடர் பெட்டிகளை

அல்லது

50 நியூ மில்வைற் சோப்

மேலுறைகளை அனுப்பி




**மில்க்வைற் அப்பியாசக் கொப்பி**

ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்

யாழ்ப்பாணம்


வா. மாநகர ப. நோ கூ. ச. இணையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 644-78

Registered as a News Paper at the General Post Office, Sri LankaU nder No. QB/8965/78